# சேபா தேசத்து ராஜஸ்திரீ

---

# THE QUEEN OF SHEBA

58-0107

செவ்வாய்க்கிழமை மாலை,
ஜனவரி 7, 1958

லேன் டெக் உயர்நிலைப்பள்ளி, சிகாகோ,
இல்லினாய்ஸ், அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# சேபா தேசத்து ராஜஸ்திரீ
## (58-0107)

நன்றி, சகோதரர் ஜோசப்.

2 ஜெபத்திற்காக இப்போது சற்று நேரம் எழுந்து நிற்போம்.

3 ஆண்டவரே, உமது நன்மைகளுக்காகவும், எங்கள் உயிர்களைக் காத்ததற்காகவும், இந்த குளிர்ந்த குளிர்கால இரவில் உம்மிடம் வருவதற்கு எங்களுக்கு கிடைத்த சிலாக்கியத் திற்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்த விரும்புகிறோம், நாங்கள் பூமியின் தூசுதான் என்பதை அறிந்திருக்கிறோம், ஆனால் எங்களுக்குள்ளே என்றென்றைக்கும் வாழும் ஒரு ஆவி இருக்கிறது. மேலும் ஆண்டவரே, இந்த இரவில் எங்கள் குறைகளை நீர் மன்னித்து, அந்த நாளில் உம்மைச் சந்திக்க எங்கள்

இருதயங்களை ஆயத்தப்படுத்தும்படி நாங்கள் ஜெபிக்கிறோம்.

4 ஜீவனின் இழைகள் என்று அழைக்கப் படுகிற, நாம் நடந்து கொண்டிருக்கும் இந்தச் சிறிய, உடையக்கூடிய இழைகள் எந்த நேரத்தில் அறுந்து, நித்தியத்திற்குள் நம்மைத் தள்ளும் என்று எங்களுக்குத் தெரியாது, ஆனால் முற்காலத்தில் தாவீது சொன்னது போல, "நான் ஒரு பொல்லாப்புக்கும் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்," மரண இருளின் பள்ளத்தாக்கிலே நாம் நடந்தாலும், நீர் நிச்சயமாக நம்மைச் சந்திப்பீர்.

5 ஆண்டவரே, எங்கள் இருதயங்கள் உம்மைச் சார்ந்திருக்கையில், எங்களை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்ளும். வியாதிப் பட்டவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் குணமாக்கும், ஆராதனையிலிருந்து மகிமையைப் பெற்றுக்கொள்ளும். இந்த குளிர்ந்த இரவில், தேவனின் வார்த்தையைக் கேட்பதற்காக மட்டும், காலநிலையைப் பொருட்படுத்தாமல் இங்கு கூடியிருக்கும் இந்த நல்ல மக்களை ஆசீர்வதியும்; உமது நன்மையின் நல்ல,

முழுமையான உணவோடு அவர்களை நீர் அனுப்பி வைப்பீர் என்று நான் அறிவேன். இதை உமது குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

6 அமருங்கள். இன்றிரவு இங்கு இருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சற்று நேரத்திற்கு முன்பு பில்லி திரும்பி வந்து, "அப்பா, இது போன்ற ஒரு இரவில் நூறு பேர் கூட அங்கு இருக்க மாட்டார்கள்" என்று சொன்னான். இப்போது, தெற்கத்தியர்களாகிய எங்களுக்கு கொஞ்சம், உங்களுக்குத் தெரியும், இரத்த ஓட்டம் கொஞ்சம் மெலிதாக இருக்கலாம். அது... இது எங்களுக்குக் குளிர்காலம்.

7 சற்று முன்பு மின்னுயர்த்தியில் (elevator) வரும்போது அந்த கறுப்பினப் பெண் சொன்னாள், அவள் சொன்னாள், "ஐயா, போதகரே," அவள் சொன்னாள், "இது மிகவும் அருமையான வானிலை."

8 இப்போது, நான் இதை விரும்புகிறேன், நான் உண்மையாகவே விரும்புகிறேன், வானிலை வறண்டதாகவும் குளிராகவும்

இருக்கும்போது இது மிகவும் நல்ல வானிலை என்று நான் நினைக்கிறேன். கர்த்தர் அங்கு இருக்கும் வரை எந்த வானிலையும் பரவாயில்லை.

9 நான் இப்போது விரைந்து சென்று உங்களுக்கு வார்த்தையை வாசிக்க விரும்புகிறேன், அதன் பிறகு உடனடியாகப் பேசுகிறேன், மேலும் வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம். இன்றிரவு தேவன் நமக்காக மிகவும் அதிகமாகச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம். நான்... உங்களுக்குத் தெரியும், நான் கலந்துகொண்ட சில மிகச்சிறந்த கூட்டங்கள், ஒரு சிறிய குழு மட்டுமே கூடியிருந்த இடங்களில்தான் நடந்திருக்கின்றன. பாருங்கள், ஒரு வீட்டின் ஜெபக் கூட்டத்தைப் போல, சில சமயங்களில் ஒரு சிறிய குழுவிற்குள் நீங்கள் முழுவதுமாக சுருங்கிவிடுவீர்கள்.

10 நான் இன்று சகோதரர் சோத்மேனிடம் சொல்லிக்கொண்டிருந்தேன், நான் சொன்னேன்... கூட்டங்களுக்கு இடையே மீன்பிடிக்க அவருடன் செல்வதற்காக, தேவனுக்கு சித்தமானால்,

அவருடைய சொந்த ஊரான ஹியூட்டனுக்கு (Hughton) நான் வந்து கொண்டிருந்தேன், அப்போது நான் சொன்னேன், "அங்குள்ள சிறிய சபையை நான் தரிசிக்க விரும்புகிறேன்." அதற்கு அவர், "சரி, அது ஒரு சிறிய குழுதான்" என்றார்.

11 நான் சொன்னேன், "அவர்களை உங்கள் வீட்டிற்கு அழைத்து வாருங்கள், நாம் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டு, இரவு முழுவதுமாக மற்றும் அடுத்த நாள் முழுவதுமாக கர்த்தரைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருப்போம்." அப்படித்தான் நான் அதை விரும்புகிறேன், அப்படியே - நாம் ஒன்றாகக் கூடி வரக்கூடிய இடத்தில், இப்போது.

12 கிறிஸ்து பெரிய கூட்டங்களிலோ, அல்லது சிறிய கூட்டங்களிலோ வருகிறார், அல்லது அவர் - அவர் உங்களுடன் தனியாக நடப்பார். நீங்கள் அவரைச் சந்திக்க விரும்பும் எந்த இடத்திலும், உங்கள் இருதயம் சரியாக இருந்தால், அவர் உங்களைச் சந்திப்பார்.

13 இன்றிரவு, கர்த்தருக்கு சித்தமானால், ஒரு சிறிய, சுருக்கமான தலைப்பை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்குத் தெரியாது... உங்களுக்குத் தெரியும், சுவிசேஷகர்கள் சில சமயங்களில் பகல் முழுவதும் நேர்காணல் களுடனும், மக்கள் வருவதிலும், செல்வதி லுமாக பிஸியாக இருக்கும்போது, சில சமயங்களில் வேதாகமத்தைப் பார்க்க உங்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. சற்று முன்பு நான் ஒரு சிறிய காகிதத்தை எடுத்தேன், அதில் நான் இதற்கு முன்பு எங்கோ பேசிய ஒன்றை எழுதியிருந்தேன், எனக்குத் தெரியாது, ஆனால் இன்றிரவு ஒரு வேதப்பகுதிக்காக (text) அதைப் பயன்படுத்துவேன் என்று நினைத்தேன், ஒருவேளை அது சிகாகோவில் இருந்திருக்காது.

14 இப்போது, ஒலிநாடா (tape) விற்கும் சிறுவர்கள் இங்கு இருக்கிறார்கள், என் சிறுவர்களான சகோதரர் லியோ மெர்சியர் மற்றும் ஜீன், மேலும் இப்போது, அவர்கள் ஒலிநாடாக்களை இங்கே விற்பனைக்காக வைத்திருக்கிறார்கள். நான் மற்ற நாள் சொல்லிக்கொண்டிருந்தது போல, நாங்கள் அவற்றை ஞாயிற்றுக்கிழமையில் விற்பதில்லை,

வாரத்தின் மற்ற நாட்களில்தான் நீங்கள் அவற்றை வாங்க வேண்டும். நான் உறுதியாக இருக்கிறேன், இந்த சிறுவர்கள்...

15 நான் அவர்களை பல ஆண்டுகளாக அறிவேன், அவர்கள்... இந்த இரண்டு இளைஞர்கள், ஒருவர் முன்பு கத்தோலிக்கப் பின்னணியில் இருந்து வந்தவர், மற்றவர், சகோதரர் ஜீன் எங்கிருந்து வந்தார், அவர் குடும்பத்தார் யார் என்று எனக்குத் தெரியாது, ஒருவேளை மெத்தடிஸ்டுகளாக இருக்கலாம், அல்லது வேறு ஏதாவது இருக்கலாம். அவர்கள் இந்தக் கூட்டத்தைப் பற்றிய ஒரு பொதுவான கருத்தைப் பெறுவதற்காகவே கூட்டத்திற்கு வந்தார்கள், கர்த்தர் அவர்களிடம் பேசினார்.

16 அந்த தரிசனங்கள் கூட்டத்தில் மட்டுமன்றி வேறு எங்காவது நடக்கிறதா என்பதைக் கண்டறிய, அவர்களே ஒரு சிறிய FBI குழுவைப் போல என் வீட்டிற்குப் பின்தொடர்ந்து வந்தார்கள். அவர்கள் அதைப் பார்ப்பதற்காக அங்கிருந்தபோது, கர்த்தர் அங்கே அந்த... சில பெரிய காரியங்களைச் செய்தார், நான் அவர்களை என்னுடைய மாணவர்கள்

என்று அழைக்கிறேன். சிறந்த சிறுவர்கள், உண்மையான, உண்மையான கிறிஸ்தவ சகோதரர்கள். அந்த சிறுவர்களை நான் நேசிக்கக் கற்றுக்கொண்டேன், அவர்கள் நேர்மையானவர்கள், நாணயமானவர்கள்.

17 அவர்கள் கூட்டத்தில் ஏதோ ஒன்றில் உடன் வர விரும்பினார்கள், நான் அவர்களை ஒலிநாடாக்களை எடுக்க அனுமதித்தேன், ஏனென்றால் அவற்றை எடுப்பதற்கு உண்மையில் எங்களிடம் யாரும் இல்லை, அதிகாரப்பூர்வமாக யாரும் இல்லை, எனவே அவர்கள் ஒலிநாடாக்களை எடுக்கச் சென்றார்கள், மக்கள் ஒலிநாடாக்களை விரும்பத் தொடங்கியபோது அவர்கள் செய்ய முடியுமா என்று அறிய விரும்பினார்கள், நான் சொன்னேன், "சிறுவர்களே, அவை மக்களுக்கு மிகவும் அதிக விலையில் விற்கப்படாமல் இருக்கும் வரை."

18 சற்று காலத்திற்கு முன்பு நான் ஒரு சுவிசேஷகரிடமிருந்து ஒரு ஒலிநாடாவை ஆர்டர் செய்தேன், அதற்கு நான் கொடுக்க வேண்டிய தொகையில், அதே ஒலிநாடாக்களை நமது

சொந்த ஒலிநாடாக்களாக மூன்றை என்னால் வாங்க முடியும். எனவே அவை உண்மையான அடக்கவிலைக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதை நான் அறிவேன்; அப்படித்தான் நாங்கள் அதைச் செய்ய விரும்புகிறோம்.

19 திரு. லிண்ட்சேயிடமிருந்து நான் பெறும் புத்தகங்கள்... அவர் நேற்றிரவு இங்கு இருந்தார். அவருக்கு சரியாகத் தெரியும்... அவை என்னுடையவை அல்ல, அவை அவருடையவை. நாங்கள் அந்தப் புத்தகங்களை வாங்குகிறோம், அவர் அவற்றில் எங்களுக்கு கொஞ்சம் தள்ளுபடி கொடுக்கிறார், பின்னர் அவை வருவதற்கான சரக்குக் கட்டணத்தை நாங்கள் செலுத்த வேண்டும், அதன் பிறகு அவற்றை விற்பனை செய்ய யாரையாவது ஏற்பாடு செய்ய வேண்டும், அங்கு நீங்கள் அவற்றில் பலவற்றை இழக்கிறீர்கள். மிகக் குறைந்த லாபத்தில்... அந்தப் புத்தகங்களை நானே அச்சிட்டாலும், அவை ஒருபோதும் கட்டுப்படியாகும் என்று நான் நினைக்கவில்லை. எனவே கூட்டம்தான் அவற்றைத் தாங்கி நிற்கிறது.

20 புகைப்படம், அது எனக்குச் சொந்தமானது அல்ல, அது டக்ளஸ் ஸ்டுடியோவுக்குச் சொந்தமானது. நாம் அவற்றை வாங்கி, நாம் வாங்கிய விலைக்கே அவற்றை விற்க வேண்டும். எனவே, நீங்கள் காண்கிறீர்கள், அதிலிருந்து வணிகரீதியாக லாபம் சம்பாதிக்க எங்களிடம் எதுவுமே இல்லை, நாங்கள் அதைச் செய்கிறோம்... நீங்கள் கேட்ட ஒன்றிற்காக இல்லாவிட்டால் அவர்கள், அவர்களில் யாரும், இங்கே இருந்திருக்க மாட்டார்கள், நாங்கள் அவற்றை உங்களுக்கு வழங்க முடியும். எனவே அவை எங்குமோ ஸ்டாண்டில் உள்ளன, நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும் அவற்றை பெற விரும்பு பவர்களுக்கும் சொல்லலாம்.

21 இப்போது வார்த்தைக்குச் செல்வோம். பரிசுத்த மத்தேயு எழுதிய சுவிசேஷப் புத்தகத்தில், 12-வது அதிகாரம் மற்றும் 42-வது வசனத்தில், சிலவற்றின் வழியாக ஒரு சிறிய பகுதியை வாசிக்க விரும்புகிறேன்... சில சூழல்களைப் பெறுவதற்காக. இப்போது 42-வது வசனம்:

**தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்.**

22 *நான் இதைச் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறேன்: நித்திய தேவனின் நித்திய வார்த்தையின் ஒரு பகுதியை நான் வாசித்தபோது, வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு சிறிய வார்த்தையும் எவ்வாறு உண்மையாக இருக்கிறது என்பதற்காக நீங்கள் அதைப் பற்றிக்கொள்ள முடியும். எல்லா காலங்களிலும் மனிதர்கள் அதை வாசிக்கும்போது, அவர்கள் புதிதாக ஒன்றைப் பெறுகிறார்கள். அந்த வார்த்தையில் ஏதோ ஒன்று இருக்கிறது!*

23 *நான் இன்று என் விடுதி அறையில் திரு. லிண்ட்சேயிடம் பேசிக்கொண்டிருந்தேன், நான் தரிசனங்களைக் கவனித்திருக்கிறேன், அவர் என்னிடம் பேசினார், அவர் சொன்னார், "சகோதரர் பிரன்ஹாம், நேற்றிரவு மேடையில்*

அமர்ந்திருந்தபோது, ஆவியானவர் எவ்வாறு தொடங்குகிறார் என்பதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன், அது முன்பை விடவும் மிகவும் பெரியதாக இருக்கிறது."

அதற்கு நான் சொன்னேன், "ஆனால் என்னை ஆச்சரியப்படுத்துவது என்னவென்றால், அது சாதாரணமாகத் தோன்றுகிறது, அது நானாக இருக்கலாம், மக்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை."

அவர் சொன்னார், "அநேகமாக அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள். நீங்கள் மேடை யிலிருந்து பேசியது போல, ஒருவேளை ஒரு நாள் உங்கள் இரத்தத்தினால் உங்கள் சாட்சியை முத்திரையிட வேண்டியிருக்கலாம், அப்போது இந்தக் காரியங்கள் விழித்தெழும், அவர்கள் சொல்வார்கள், 'சரி, இது எங்களுக்குத் தெரியவே தெரியாது.'"

24 அதுவே முடிவாகவும் இருக்கலாம். ஒரு உண்மையான கிறிஸ்தவ விசுவாசியாக அது தேவனிடமிருந்து வருகிறது என்பதை நான் எவ்வாறு அறிவேன்! அது ஒருபோதும்

தவறுவதை நான் ஒருமுறை கூட பார்த்ததில்லை.

25 மேலும் இந்தப் புகைப்படத்தைப் பார்ப்பதற்கும்... ஒரு சிறு பையனாக, நான் சுமார் மூன்று வயதுக்குட்பட்டவனாக இருந்தபோது, நான் பதினெட்டு மாதங்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறேன்...

26 "சகோதரர் பிரன்ஹாம், நீங்கள் அவ்வளவு தூரம் பார்க்கவில்லை, அல்லது, நினைவில் வைத்திருக்கவில்லை" என்று நீங்கள் நினைக்கலாம்.

27 எனக்கு நினைவிருக்கிறது. நான் ஒரு சிறு பையனாக இருந்தபோது அது என்னிடம் பேசியது எனக்கு நினைவிருக்கிறது, அவர்கள் அதைப் படம்பிடிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே வாழ்நாள் முழுவதும் நான் அதை எவ்வாறு விவரித்தேன் என்பதும் எனக்கு நினைவிருக்கிறது. இப்போது அவர்கள் அதன் மூன்று அதிகாரப்பூர்வப் புகைப்படங்களை வைத்திருக்கிறார்கள், ஒன்று ஜெர்மனியிலிருந்து, இரண்டு அமெரிக்காவிலிருந்து கர்த்தருடைய தூதரின் புகைப்படம், அது ஒரு இயற்கைக்கு

அப்பாற்பட்ட ஜீவன் என்று ஜெர்மனி மற்றும் அமெரிக்காவின் விஞ்ஞானிகள் தங்கள் முத்திரையைப் பதித்துள்ளனர், அது அந்த அக்கினி ஸ்தம்பம் என்று சரியாக விவரிக்கப்பட்டுள்ளது.

28 என் கருத்தின்படி, நான் தவறாக இருந்தால், தேவன் என்னை மன்னிப்பாராக, உங்கள் சகோதரனாக, இஸ்ரவேல் மக்களை வழிநடத்திய அதே அக்கினி ஸ்தம்பம்தான் இது என்று நான் நினைக்கிறேன். அது என்னோடு படம்பிடிக்கப்பட்டதால் நான் அதைச் சொல்லவில்லை, ஏனென்றால் அது எனக்காக அல்ல, அது சபைக்கு, முழு சபைக்கு மானதாகும்.

29 இப்போது, நாம் கவனித்தால், இஸ்ரவேல் மக்களை வழிநடத்தியது உடன்படிக்கையின் தூதன்தான் என்பதை நாம் அறிவோம், அது வார்த்தை (Logos), அல்லது கிறிஸ்து, கிறிஸ்துவின் ஆவியாகும். அவர் பூமியில் இருந்தபோது, "நான் தேவனிடத் திலிருந்து வந்தேன், தேவனிடத்திற்குப் போகிறேன்" என்று கூறினார்.

30 பின்னர் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, பவுல் தமஸ்குவுக்குப் போகும் வழியில் ஒரு ஒளியால் கீழே தள்ளப்பட்டார், அதே அக்கினி ஸ்தம்பம், மற்றவர்கள் யாரும் அதைக் காணவில்லை, பவுல் அதைக் கண்டார், அது அவருக்கு மிகவும் உண்மையாக இருந்ததால், அது சிறிது காலத்திற்கு அவரது கண்களைக் குருடாக்கியது.

31 பேதுரு, அது உள்ளே வந்தது, ஒரு ஒளி கம்பிகளின் வழியே சிறைச்சாலைக்குள் வந்து, சிறையிலிருந்து அவரை வெளியே வழி நடத்தியது.

32 இப்போது நாம் காண்கிறோம், வேதப்பூர்வமாக, இது அதே அக்கினி ஸ்தம்பமாகவே தோன்றுகிறது. இன்றைக்குப் பாருங்கள், அது நமது ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகராகிய கர்த்தராகிய இயேசுவுக்குள் இருந்தபோது செய்த அதே வகையான கிரியைகளையே செய்கிறது.

33 அது எப்படி மக்களின் தலைக்கு மேலாகச் செல்கிறது என்பதை என்னால் - என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

ஆனால், உங்களுக்குத் தெரியும், சில காரியங்கள் அப்படித்தான் செல்ல வேண்டும், எல்லாம் முடிந்த பிறகு, மக்கள் சொல்வார்கள், "சரி, நான் - நான் உண்மையில் அதை அப்படிப் பார்க்கவில்லை." புகைப்படத்தை பரிசோதித்த கைரேகை மற்றும் - மற்றும் - புகைப்படங்களின் ஆவணங்களின் தலைவரான FBI-யின் ஜார்ஜ் ஜே. லேசி சொன்னது போல, இது பின்பாகத்தான் இருக்க வேண்டும்.

34 இப்போது, அதிலே... சற்று காலத்திற்கு முன்பு, ஒரு தரிசனம் வந்து ஆப்பிரிக்காவுக்குச் செல்வதைப் பற்றி என்னிடம் சொன்னது. முதலில் ஆப்பிரிக்காவுக்கும், பிறகு இந்தியாவுக்கும் செல்வதுதான் அதன் அர்த்தம் என்று நான் நினைத்தேன். முதலில் ஆப்பிரிக்காவுக்கும், பிறகு இந்தியாவுக்கும் செல்லும்படி கர்த்தர் என்னிடம் பேசிச் சொன்னார். நான் அது தரிசனத்துடன் ஒத்துப் போகிறது என்று நினைத்தேன்.

35 பின்னர் நான் அதை மறந்துவிட்டு முதலில் இந்தியாவுக்குச் சென்றேன், பிறகு கதை உங்களுக்குத் தெரிந்தபடி, போர்ச்சுகலில் அவர்

என்னைக் கடிந்துகொண்டார். மேலும் சொன்னார், "முதலில் ஆப்பிரிக்காவுக்குச் செல் என்று நான் உன்னிடம் சொன்னேன் என்று நினைத்தேன்." அப்போது நான் குற்ற உணர்வடைந்தேன். நான் எப்போதும் நினைத்தேன், இப்போது அது வருகிறது, வெளிப்பாடு என்னை ஆப்பிரிக்காவுக்குத் தள்ளத் தொடங்குகிறது, நான் தரிசனத்தில் வாசித்தேன், தரிசனம் உண்மையில், "முதலில் இந்தியாவுக்குச் செல், பின்பு ஆப்பிரிக்காவுக்குத் திரும்பு" என்று சொன்னது. அது அப்படித்தான் சரியாக நடக்கப் போகிறது.

36 இப்போது பாருங்கள், நான் தவறு செய்வேன் என்பதை அறிந்து, கர்த்தர் என்னிடம் பேசினார், ஆனால் தரிசனம் தவற முடியாது, தேவன் ஏற்கனவே சொன்னது அது, அது தவற முடியாது. அந்த தரிசனம், என் வேதாகமத்தின் முதல் பக்கத்தில் நான் எழுதியிருக்கிறேன். நான் முதலில் இந்தியாவுக்குச் செல்வேன், பிறகு ஆப்பிரிக்காவுக்குத் திரும்புவேன் என்று அது உண்மையில் எவ்வாறு வாசிக்கிறது என்பதை நான் அதைக் கீழே கொண்டு வந்து ஒருவேளை உங்களுக்குக் காண்பிப்பேன், ஆனால் நான்

தவறு செய்வேன் என்பதை அறிந்து, அவர் முதலில் ஆப்பிரிக்காவுக்கும், பின்பு இந்தியா வுக்கும் செல்லும்படி என்னிடம் கூறினார், ஆனால் தரிசனம் ஒருபோதும் தவற முடியாது. தேவன் அதைப் பேசியிருக்கிறார், அது அப்படித்தான் இருக்க வேண்டும்.

37 ஓ, நாம் வாழும் நாள் எத்தகையது! நாம் இப்போது எதிர்கொண்டிருக்கும் எத்தகைய மணிநேரம், முடிவின் காலம்! விஷயம் என்னவென்றால், இன்றைக்கு மக்கள் பார்க்கிறார்கள், இன்றிரவு நமது வேதப் பகுதியைப் போலவே, "இது எங்கிருந்து வந்தது? இந்த ஞானம் எப்படி, தச்சனின் மகன்?" அது அந்த நபர் அல்ல, அது கிறிஸ்து, தேவன் என்பதை அவர்கள் உணருவதில்லை.

38 இயேசு சொன்னார், "நான் என் பிதாவின் கிரியைகளைச் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை. ஆனால் நான் என் பிதாவின் கிரியைகளைச் செய்தால், உங்களால் என்னை விசுவாசிக்க முடியாவிட்டால், கிரியைகளையாவது விசுவாசி யுங்கள்." பாருங்கள்? பின்னர் எழுதப்

பட்டுள்ளது, "அவர் இத்தனை காரியங்களைச் செய்திருந்தும், அவர்களால் விசுவாசிக்க முடியவில்லை, ஏனென்றால், 'கண்கள் இருந்தும் காணமுடியாது; காதுகள் இருந்தும் கேட்க முடியாது' என்று ஏசாயா சொன்னார்." அவர் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மீண்டும் உயிர்த்தெழும் வரை, அது தேவனுடைய குமாரன் என்பதை உலகம் உண்மையில் உணரவில்லை.

39 இப்போது, தேவன் எல்லா காலங்களிலும் ஒவ்வொரு சந்ததிக்கும் ஏதாவது ஒரு வழியில் தம்மை வெளிப்படுத்தும் முறையைக் கொண்டிருந்தார். அவர்... அந்த நியாயத்தீர்ப்பு நாளில் எந்த நேரத்திலும் யாருக்கும் ஒரு சாக்குப்போக்கு கூட இருக்காது. அனந்த ஞானமுள்ள தேவன் ஒவ்வொரு சந்ததிக்கும் ஏதாவது ஒரு சிறப்பான, பிரத்தியேகமான முறையில் தம்மை வெளிப் படுத்தியிருக்கிறார். "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தச் கடைசி நாட்களில் குமாரன், கிறிஸ்து இயேசுவின் மூலமாய்." அவர்

எப்பொழுதும் ஒரு வழியை உண்டாக்கி யிருக்கிறார், மேலும் அது எப்பொழுதும் முன்நியமிக்கப்பட்ட விசுவாசியின் கவனத்தை ஈர்க்கும் மற்றும் ஆக்கினைக்கு நியமிக்கப் பட்டவர்களின் கண்களைக் குருடாக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருந்து வருகிறது. அது முற்றிலும் சரி. தேவன் உங்களை விசுவாசிக்க அழைத்தாலொழிய உங்களால் விசுவாசிக்க முடியாது, அது முற்றிலும் சரி, வேதம் தவற முடியாது.

40 இயேசு பூமிக்கு வந்து வெறுமனே, "சரி, நான் மரித்துப் பார்ப்போம், யார்... என்மேல் இரக்கமாயிருப்பார்கள், ஒருவேளை அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்" என்று சொல்வதற்காக வரவில்லை. அது நோக்கமல்ல. யார் இரட்சிக்கப் படுவார்கள் என்று பிதாவின் முன்னறிவின் படி அறிந்திருந்தாரோ, அவர்க ளுக்காக மரிக்க அவர் வந்தார், உலகம் தோன்றுவதற்கு முன்பே, யார் இரட்சிக்கப் படுவார்கள் என்று தேவன் அறிந்திருந்தாரோ, அந்த மீதியானவர்களை இரட்சிக்க அவர் வந்தார். அது முற்றிலும் சரி. "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன்

என்னிடத்தில் வரமாட்டான்" என்று கூறினார். அது சரி. "ஆகையால் விரும்புகிறவனாலுமல்ல, ஓடுகிறவனாலுமல்ல, இரங்குகிற தேவனாலேயே ஆகும்." அது சரியானது.

41 இப்போது, கடந்த காலங்களுக்குச் சென்று, இந்தச் சிறிய செய்தியை இதன் அடிப்படையில் அமைக்க விரும்புகிறோம்: கடந்துபோன காலங்களில், தேவன் தம்மை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காக பூமியில் எதையாவது அனுப்பியபோது, மக்கள் பொதுவாக அதை ஏற்றுக்கொண்டால், அவர்கள் ஒரு பெரிய யூபிலி (மகிழ்ச்சி) காலத்தைக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் அதை நிராகரித்தால், அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

42 இயேசு இங்கே மக்களிடம் பேசிக்கொண்டும் அற்புதங்களைச் செய்து கொண்டும் இருந்தார், அவரால் மக்களின் சிந்தனைகளை பகுத்தறிய முடிந்தது, சபையின் அந்த நாட்களின் நன்கு பயிற்சி பெற்ற அறிஞர்கள் அவரைப் பெயெல்செபூல் என்று கூறினார்கள். இப்போது, நீங்கள் வீட்டிற்குச் செல்லும்போது, இந்த அதிகாரத்தை வாசித்துப்

பாருங்கள், அந்த அறிஞர்கள் சத்தமாக, “அவர் பெயெல்செபூல்” என்று சொல்லவில்லை என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள், ஆனால் அவர் பெயெல்செபூல் என்று அவர்கள் தங்கள் இருதயங்களில் நினைத்தார்கள். இயேசுவால் அவர்களின் சிந்தனைகளை பகுத்தறிய முடிந்தது, வேதாகமம் அவ்வாறு சொல்கிறது; அவர்கள் அதை நினைத்துக்கொண்டு மட்டுமே இருந்தார்கள்.

43 நீங்கள் அதை சத்தமாக சொல்ல வேண்டியதில்லை, தேவன் உங்கள் சிந்தனைகளை அறிந்திருக்கிறார். "அந்த மனிதன் ஒரு ஆவியுலகத் தொடர்புகொள்பவன், அவன் ஒரு குறிசொல்லுகிறவன், அல்லது பெயெல் செபூல் என்னும் ஒரு பெரிய பிரதான பிசாசு" என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

இயேசு, அவர்களின் சிந்தனைகளை அறிந்துகொண்டு, அவர்களிடம் சொல்லத் தொடங்கினார், “சாத்தான் சாத்தானைத் துரத்தக் கூடுமா? அவனால் முடியுமானால், அவனுடைய

ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிக்கப்பட்டிருக்கும்."

44 பின்பு அவர் இந்த முற்றிலும் பெரிய அறிக்கையைச் செய்தார்: "நீங்கள் என்னைப் பெயெல்செபூல் என்று அழைத்தால், நான் உங்களை மன்னிப்பேன்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் வரும்போது, நீங்கள் அவரைத் தூஷித்தால், அதற்கென்றைக்கும் மன்னிப்பு இல்லை, இந்த உலகத்திலும் இல்லை, வரப்போகிற உலகத்திலும் இல்லை, அதற்காக நீங்கள் ஒருபோதும் மன்னிக்கப்படமாட்டீர்கள்."

45 இப்போது, பரிசுத்த மாற்கு நற்செய்தியில் அவர் அதைக் குறிப்பிட்டபடி, அவர்கள் அவரை ஒரு அசுத்த ஆவி என்று அழைத்ததனால் அப்படிச் சொன்னார், அவர் செய்துகொண்டிருந்த கிரியைகளை, அவர்களின் சிந்தனைகளை பகுத்தறிந்ததை, மற்றும் தேவனிடமிருந்து அடையாளங்களைக் காண்பித்ததை, அவர்கள் பிசாசு என்றும், ஒரு அசுத்த ஆவி என்றும் அழைத்தார்கள், தேவனுடைய கிரியை ஒரு அசுத்த ஆவியாகக்

கருதப்பட்டது, அது ஒருபோதும் மன்னிக்கப்பட முடியாத தூஷணம் என்று இயேசு சொன்னார்.

46 அப்படியானால் அமெரிக்காவைப் பற்றி என்ன? நாம் வாழும் இந்த நாளைப் பற்றி என்ன? ஆயிரக்கணக்கான முறைகளும், ஆயிரமாயிரம் முறைகளுமாகச் செய்யப்பட்ட மன்னிக்க முடியாத பாவத்தைப் பற்றி என்ன? சபையும், பெரிய போதகர்களும், மற்றவர்களும், “அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதீர்கள். ஏன், அது பிசாசு!” என்று சொல்லும்போது, அவர்கள் தேவனுடைய சமூகத்திலிருந்து தங்களை நித்தியமாகப் பிரித்துக்கொள்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு பிரசங்கித் திருந்தாலும், அவர்கள் என்னவெல்லாம் செய்திருந்தாலும், தேவனுடைய வார்த்தை தவற முடியாது. நீங்கள் யாராக இருந்தாலும் சரி, முகதாட்சணியம் இல்லை, போதகராக இருந்தாலும் சரி, அறிஞராக இருந்தாலும் சரி.

47 ஒரு குறிப்பிட்ட வம்ச வழியிலும் ஒரு குறிப்பிட்ட பிறப்பிலும் வந்திருக்க வேண்டும், பயிற்சி பெற்றிருக்க வேண்டும், பரிசுத்த

மாகவும், நீதியாகவும், நேர்மையாகவும், உத்தமமாகவும் இருக்க வேண்டும் என்று மிகவும் மார்க்கப்பற்றுள்ளவர்களாக இருந்த அந்தப் பரிசேயர்களைப் பார்த்து இயேசு, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனிலிருந்து வந்தவர்கள்" என்று சொன்னார். அது சரிதான். பிசாசும் மார்க்கப்பற்றுள்ளவன், அவனால் மிகவும் பக்தியான மற்றும் பரிசுத்தமான செயல்களைச் செய்துகாட்ட முடியும், ஆனால் தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார்.

48 இயேசு ஒரு குறிப்பிட்ட இடத்தில், "உங்களால் எப்படி நல்ல காரியங்களைப் பேச முடியும்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று சொன்னார். உங்கள் இருதயம் ஒன்றை நினைத்து, உங்கள் வாய் மற்றொன்றைப் பேசினால், "நீங்கள் மாயக்காரரர்கள்" என்று அவர் சொன்னார். அதுதான் அந்த நாளில் இருந்ததை விட அதிகமாக, இன்று உலகில் உள்ளது.

49 ஆனால் இப்போது நாம் அவரைப் பார்க்கிறோம், அவர்... அவர்கள் அவரைப்

பார்த்து, "இந்த மனிதன் பெயெல்செபூல், ஏனென்றால் இவன் ஒரு குறிசொல்லுகிறவன். இவன் ஒரு—ஒரு சோதிடன் அல்லது ஏதோ ஒரு பொல்லாத ஆவி" என்று சொல்கிறார்கள்.

50 தேவன் செயல்பட்ட முந்தைய நாட்களை இயேசு அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார், அவர் யோனாவைப் பற்றிப் பேசினார், பின்னர் அவர் சாலொமோனின் நாளுக்கு வருகிறார். சாலொமோன் ஒரு பெரிய மனிதர், அவர் தாவீதின் குமாரனாக இருந்தார், கர்த்தராகிய இயேசுவின் முன்நிழலாக இருந்தார். அவருடைய ராஜ்யம், நிச்சயமாக, பூமிக் குரியதாக இருந்தது, அது அழிந்துபோனது, ஆனால் தாவீதின் குமாரனாகிய இயேசுவின் ராஜ்யம் ஒருபோதும் அழியாது. மேலும் சாலொமோனின் நாட்களில்... என்பதை நாம் கவனிக்கிறோம்.

51 மேலும் சாலொமோன் வாழ்ந்த நாளை விட அவர்கள் வாழ்ந்த நாள் பெரியது என்று இயேசு அறிவித்தார். அப்படியானால், அப்போதிருந்த தூஷணம் மன்னிக்கப்பட்டாலும், இந்த நாளில் அது மன்னிக்கப்பட முடியாது

என்றால் அது எவ்வளவு பெரியது? அவர் கலிலேயாவில் நடந்தபோது இருந்ததை விட இது எவ்வளவு பெரிய நாள்! அவர் இங்கே பூமியில் இருந்தபோது இருந்ததை விட, இன்று மனிதர்களுக்கு முன்பாக அவருடைய செயல்களையும் அவருடைய கிரியைகளையும் நிராகரிப்பது மிகவும் பாவமானது. ஓ, சபை மட்டும் இந்தக் காரியங்களுக்கு விழித்தெழுந்தால்!

52 இப்போது கவனியுங்கள், சாலொமோனின் நாட்களில், தேவன் ஒரு பெரிய வரத்தை பூமிக்கு அனுப்பினார், அது பகுத்தறியும் வரம், அந்த வரம் சாலொமோனிடம் இருந்தது. மேலும் ஓ, தேசம் முழுவதும் அதை விசுவாசித்தது. கர்த்தர் அவனுக்குக் கொடுத்திருந்த சாலொமோனின் இந்தப் பெரிய ஞானத்தை அவர்கள் கண்டபோது இஸ்ரவேலர் அனைவரும் ஏகோபித்த மனதோடு இருந்தார்கள், தேவன் இந்தப் பெரிய வரத்தைக் கொடுத்தபடியால் முழு தேசமும் மகிழ்ந்தது.

53 மேலும், உங்களுக்குத் தெரியும், அது இஸ்ரவேலின் பொற்காலம் என்று அழைக்கப் படுகிறது, அது அவர்களின் ஆயிரவருட அரசாட்சியைப் போல இருந்தது. இஸ்ரவேல் அவர்கள் கொண்டிருந்த வேறு எந்த ராஜாவின் கீழும் இருந்ததை விட சாலொமோனின் கீழ் அதிகமாகச் செழித்தோங்கியது என்று நான் எண்ணுகிறேன், ஏனென்றால் தேவன் அனுப்பி யிருந்த வரத்தை அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்கள் அதை நிராகரித்திருந்தால், அவர்கள் அடிக்கப்பட்டு, பிற தேசங்களால் வெளியேற்றப் பட்டிருப்பார்கள்.

54 இன்று தேவன் எதையாவது அனுப்பும் போது, சபை அதை நிராகரித்தால், குழப்பத்தைத் தவிர வேறு எதை நாம் எதிர்பார்க்க முடியும்? பிரிவினைகள், தடைகள், அமைப்புகள், மற்றும் எல்லாவிதமான போலியான காரியங்கள், என எல்லாவற்றையும் தவிர இன்று நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? ஏனென்றால் நாம் அதை நிராகரிக்கிறோம். தேவன் எதையாவது செய்யத் தொடங்கும்போது, சிலரிடையே, ஒருவேளை ஒரு கூட்ட மக்களிடையே, மற்றவர்கள்

சொல்வார்கள், "சரி, அது எங்கள் சபைப் பிரிவு அல்ல. சரி, அதைச் செய்ய எங்கள் சொந்த ஆளையே நாங்கள் வைத்துக்கொள்வோம்." அப்படிச் செய்வதால் நீங்கள் மாம்சரீதியான போலியான காரியங்களை ஏற்படுத்துகிறீர்கள், இது தேவனுடைய பார்வைக்குப் பொல்லாதது, மேலும் உண்மையான காரியத்திலிருந்து விலக்கிக்கொண்டு போகிறது. அது சரிதான்.

55 சிறிது காலத்திற்கு முன்பு அவர்கள் ஒரு சிறுபையனை எழுப்பியிருந்தபோது, சுமார் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் அந்தச் சிறுபையனைப் பார்க்கச் சென்றேன், அவனுடைய பெயர் லிட்டில் டேவிட் வாக்கர், ஒரு அற்புதமான, சிறிய பிரசங்கி. அம்மா அவனுக்குக் கற்றுக்கொடுத்தது போல, இயேசு எப்படி ஒரு சிறிய குழந்தையாக இருந்தார் என்பது போன்ற சிறிய கதைகளை அவன் சொல்லவில்லை, அவன் தன் கோட்டைக் கழற்றி வைத்துவிட்டு, ஒரு வேதப்பகுதியை எடுத்து, ஒரு மனிதனைப் போல அதைக் கையாண்டான்.

56 நான் சில சகோதரர்களிடம் பேசினேன், முழு நற்செய்தி வட்டத்திற்கு நான் அப்போதுதான் புதிதாக வந்திருந்தேன், நாங்கள் பாப்டிஸ்டுகளுக்கு இருந்த அதே பிரச்சனை, எல்லாவிதமான பிரிவினைகளும் அவர்களுக்கு இருப்பதை நான் அறியவில்லை, அவர்கள் தேவதூதர்கள் என்று நான் நினைத்தேன். பின்னர் நாங்கள் அதைக் கண்டறிந்தோம், அவர்களில் ஒருவர், “சரி, அவன் குறிப்பிட்ட அந்தக் குழுவைச் சேர்ந்தவன்” என்று சொன்னார்.

57 நான் சொன்னேன், “அவனுடைய தகப்பன் எதைச் சேர்ந்தவர் என்பதால் என்ன வித்தியாசம் வந்துவிடப் போகிறது? அவன் தேவன் சபைக்கு அனுப்பிய ஒரு வரம்.” நான் சொன்னேன், “சகோதரர்களே, உங்களுடைய சிறிய, வித்தியாசமான கருத்துக்களைத் தகர்த்தெறிந்துவிட்டு, அந்தச் சிறுபையனைச் சுற்றி வந்து, அவனை மேட்டிமையடைய விடாமல், அவனை அனுப்பினால், அவன் ஆயிரக்கணக்கான சிறுபிள்ளைகளை, சிறு பையன்களையும் சிறுமிகளையும் கர்த்தருக்கு ஆதாயப்படுத்துவான்.”

58 ஆனால் என்ன நடந்தது? ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒரு "லிட்டில் டேவிட்டை" வைத்துக்கொண்டார்கள். நீங்கள் சென்ற இடமெல்லாம், நான்... அந்தச் சிறுவன் மியாமிக்குச் சென்று சிக்கலில் மாட்டிக் கொண்டான், நான் அவனுக்கு உதவக் கீழே சென்றேன், முழுமையாக இரண்டு பக்கங்களும் "லிட்டில் டேவிட்"களால் நிறைந்திருந்தன. பொறாமை! இது மாம்சத்திற்குரியது என்றும் தேவனுடையது அல்ல என்றும் இது காட்டுகிறது. இப்படிப்பட்ட ஒரு தந்திரத்தைச் செய்யும் எந்தச் சபையும் தேவனுடையது அல்ல, அது அப்படி இருக்கவும் முடியாது. இன்று நாம் அந்த நிலைமையில்தான் இருக்கிறோம், அவர்கள் எதையும் விசுவாசிக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள் அதைப் போலியாகச் செய்ய முயலுகிறார்கள், அவர்கள் அப்படிச் செய்யும்போது, அவர்கள் அதைப் பற்றிய மாம்சரீதியான கருத்துருவாக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் அப்படிச் செய்யும்போது, அவர்கள் அதின் மாம்சரீதியான வெளிப்பாடுகளைக் கொண்டிருக்கிறார்கள், அது அதை மட்டுமே உருவாக்கும்.

59 ஆனால் சாலொமோனின் காலத்தில் அப்படி இல்லை, தேவன் தங்களுக்கு ஒரு சாலொமோனை அனுப்பியிருக்கிறார் என்றும் அவர் தேவனுடைய ஊழியக்காரர் என்றும் அவர்கள் அனைவரும் விசுவாசித்தார்கள், மேலும் அவர்கள் அனைவரும் அந்த வரத்தைச் சுற்றி ஒன்றுகூடினார்கள். அவர்களிடம் ஐம்பது சாலொமோன்கள் இல்லை, அவர்களிடம் ஒரு சாலொமோன் மட்டுமே இருந்தார்.

60 அவர்களிடம் ஒருபோதும் ஐம்பது மோசேயும் இருந்ததில்லை. ஒரு காலத்தில் கோராகு என்று பெயர்கொண்ட ஒரு மனிதன் இருந்தான், அவன் எழும்பி, "இப்போது, ஒரு நிமிடம் பொறுங்கள், மோசேயைப் போலவே பல தீர்க்கதரிசிகளும் பரிசுத்தவான்களும் இருக்கிறார்கள், மோசே ஒருவன் மட்டுமல்ல" என்று சொன்னான்.

61 தேவன் மோசேயிடம், "உன்னை அவனிடமிருந்து பிரித்துக்கொள்" என்று சொன்னார். பின்பு அவர் பூமியைத் திறந்து அவனை விழுங்கும்படிச் செய்தார்.

62 கடைசி நாட்களில் அதே காரியம் நடக்கும் என்றும், அவர்கள் கோராகின் முரட்டாட்டத்தினால் அழிந்துபோவார்கள் என்றும் வேதாகமம் முன்னறிவிக்கிறது. அது சரிதான். அதுவே வேதாகம வசனம்.

63 கவனியுங்கள், ஆனால் சாலொமோனின் காலத்தில்... அந்தப் பெரிய வரம் இருந்த சாலொமோனின் காலத்திற்கு இயேசு அவர்களைச் சுட்டிக்காட்டினார். நாம் அதைப் பார்ப்போம், இப்போது, ஒவ்வொருவரும் சாட்சிசொல்லத் தொடங்கினார்கள், "கர்த்தராகிய தேவன் நம்முடன் இருக்கிறார், நிச்சயமாக அவர் இருக்கிறார், ஏனென்றால் அவர் நமது சகோதரராகிய சாலொமோன் என்னும் ஒரு பெரிய மற்றும் வல்லமையான வரத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவர் நமக்குச் சொல்லத்தக்கதாக கர்த்தர் அவருக்குப் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார், நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் சொல்லவும்—சொல்லவும் கொடுத்திருக்கிறார். மேலும் கர்த்தருடைய ஆவியானவர் நம் சகோதரர் மேல் எவ்வளவு பலமாக இருக்கிறார்!" என்று

ஒவ்வொருவரும் ஏகோபித்த மனதோடு இருந்தார்கள்.

64 அது பாலஸ்தீனம் முழுவதும் பரவத் தொடங்கியது, சாலொமோன் தேவனுடைய ஊழியக்காரர் என்பது உலகளாவிய செய்தியாக மாறும் வரை, அது தேசத்திலிருந்து தேசத்திற்கும், இடத்திற்கு இடத்திற்கும் சென்றது, பரலோகம் மட்டுமே ஒரு சபைக்கும் ஒரு மனிதனுக்கும் அனுப்பக்கூடிய ஒரு பெரிய, வல்லமையான வரம் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது என்று; மனிதன் அந்த காரியங்களை தனக்குத்தானே செய்துகொள்ள முடியாது. மேலும் அவர்கள் அனைவரும் ஏகோபித்த மனதோடு விசுவாசித்தார்கள்.

65 அது என்ன செய்தது என்பதைப் பார்க்கிறீர்களா? அது அவர்களுக்கு ஒரு வல்லமையான ஆலயத்தைக் கட்டியது, அது அவர்களுக்கு உலகின் செல்வத்தைக் கொடுத்தது, அது ஒவ்வொரு தேசத்திலும் அவர்களுக்குத் தயவைக் கொடுத்தது, எல்லா தேசங்களும் இஸ்ரவேலரைப் பார்த்துப் பயந்தன, ஏனென்றால் தேவன் தங்களுக்கு அனுப்பிய ஒரு

வரத்தின் பேரில் மக்களிடையே இருந்த வல்லமையான ஒற்றுமையை அவர்கள் கண்டார்கள்.

66 இறுதியாக, அறியப்பட்ட உலகின் கடைக்கோடிப் பகுதிகளில் ஒரு சிறிய ராணி இருந்தாள், ஒரு புறஜாதிப் பெண்; அவள் இங்கே தெற்கத்திய ராணி என்று அழைக்கப்படுகிறாள், அதுவே சேபா. அவள் தன்னுடைய தேசம் இருந்த பாலைவனங்களுக்கு அப்பால் வெகு தொலைவில் இருந்தாள். அவ்வழியாகச் செல்லும் ஒவ்வொருவரும் சொல்வார்கள், "ஓ, நீங்கள் மேலே எருசலேமிலும், பாலஸ்தீனத்திலும் இருக்க வேண்டும், ஏனென்றால் ஒரு பெரிய வரத்தோடு அவர்களைச் சந்தித்த ஒரு பெரிய தேவன் அங்கே அவர்களுக்கு இருக்கிறார். அவர்கள் ராஜாவாக்கின சாலொமோன் என்பவரால் அடையாளங்களும் அற்புதங்களும் நடந்து கொண்டிருக்கின்றன." உங்களுக்குத் தெரியும், "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வார்த்தையினாலே வரும். விசுவாசம் கேள்வியினாலே வரும்."

67 இப்போது, சபை ஒருவரைக் கண்டித்து, மற்றொருவரை உயர்த்தி, இவரை வெளியே தள்ளி, இதை வைக்கும்போது, வெளியிலுள்ள உலகம் எப்படி விசுவாசிக்க முடியும்? காண்கிறீர்களா?

68 ஆனால் அப்போது அப்படி இல்லை, அனைவரும் ஏகோபித்த மனதோடு சாட்சி சொல்லிக்கொண்டிருந்தார்கள், அது ஒரு அற்புதமான காரியமாக இருந்தது. அந்தச் சிறிய ராணி இதைக் கேட்கத் தொடங்கினாள். இப்போது, அவள் இஸ்ரவேல் கோத்திரத்தைச் சேர்ந்தவள் அல்ல, அவள் ஒரு புறஜாதியப் பெண். ஆனால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி வார்த்தையினாலே வரும். நீங்கள் இதுபோன்று சாட்சிகளைத் தொடர்ந்து கேட்கும்போது, அது ஆர்வத்தைத் தூண்டுகிறது, மக்கள், "இது அப்படி இருக்கக்கூடுமா?" என்று ஆச்சரியப்படத் தொடங்குகிறார்கள்.

69 அப்படித்தான் அந்தச் சிறிய ராணி உணரத் தொடங்கினாள் என்பதில் சந்தேகமில்லை. படிப்படியாக விசுவாசம் வளர வளர, அவள் சொன்னாள், "உங்களுக்குத்

தெரியுமா, இதை நான் உறுதியாகத் தெரிந்துகொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, நான் சென்று நானே பார்ப்பேன் என்பதே அது.” அதுவே நல்ல காரியம். மற்றவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ளாதீர்கள், சென்று, நீங்களே பாருங்கள், தெளிவடையுங்கள்.

70 அந்தச் சிறிய பெண் எதிர்கொள்ள வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தன என்பதில் சந்தேகமில்லை. அவளுக்கும் அவள் செல்வதற்கும் எதிராக அநேக காரியங்கள் இருந்தன. முதல் காரியம், அவள் செல்வது அவளுடைய மார்க்கத்திற்கு விரோதமானதாக இருந்தது, அவளுடைய சபை அங்கே நடைபெறும் அந்தக் கூட்டத்திற்கு ஒத்துழைத்திருக்காது, ஆனால் அது அவளுக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை, அவள் கண்டறிய விரும்பினாள், அவள் உறுதியாக இருக்க விரும்பினாள்.

71 எனவே, ஒரு காரியம் என்னவென்றால், அவளுக்கு ஒரு நீண்ட பயணம் இருந்தது, அவள் ஒரு பெண்தான். நினைவில்

கொள்ளுங்கள், அந்த நாட்களில் பாலை வனங்களில் இஸ்மவேலின் குமாரர்கள் அங்கே இருந்தார்கள், அவர்கள் கொள்ளையர்களாக இருந்தார்கள். இப்போது, அந்தச் சிறிய பெண், தனக்குள் ஏதோ ஒன்று அவளை இழுக்கத் தொடங்கியதால், அவள் எப்படியாவது சென்று தானே பார்க்க வேண்டும் என்று விரும்பினாள். நான் அதை விரும்புகிறேன்.

72 பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டபோது, நாத்தான்வேல், "இப்போது, நாசரேத்திலிருந்து ஏதாகிலும் ஒரு நன்மை வரக்கூடுமா?" என்று கேட்டார். பிலிப்பு, "வந்து, நீயே பார். வா, தெளிவடை" என்று சொன்னான்.

73 அந்தச் சிறிய ராணியும் அதே காரியத்தைத்தான் நினைத்தாள். இன்றிரவு சிகாகோவில் உள்ள பல்லாயிரக்கணக்கான, ஆம், இலட்சக்கணக்கான மக்களை விட அந்த ராணி தன் எண்ணங்களில் எவ்வளவு மேலானவளாக இருந்தாள்! செய்தித்தாள்கள் மற்றும் எல்லாவற்றிலும், கூட்டம் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தேசம் நியாயத்தீர்ப்புக்கு எப்படிப் பக்குவம

டைந்துள்ளது என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? தேவனுக்குச் சித்தமானால், என் குரல் கொஞ்சம் சரியானால், இன்னும் சில இரவுகளில் நான் நவீன ஸ்புட்னிக் குறித்துப் பிரசங்கிக்கப் போகிறேன். எனவே அடுத்த இரவு நான் ஏதாவதொரு மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும், ஏனென்றால் அது உங்களை இருண்ட இடத்தில் தொங்கவிடுகிறது.

74 இப்போது கவனியுங்கள், ஆனால் இன்றைய மக்கள் நற்செய்தியைக் கேட்பதை விட தொலைக்காட்சியைப் பார்ப்பதில்தான் அதிக திருப்தியடைகிறார்கள் என்பதால், பிரிவினைகளின் காரணமாக மட்டுமே கிறிஸ்துவை நிராகரிப்பதைப் பார்ப்பது! அவர்கள் இருதயங்கள் பசியாக இல்லை, அவர்கள் கவலைப்படுவதில்லை, இப்போது, அவர்கள் இது போன்ற ஒரு இரவில் வெளியே வர மாட்டார்கள். வெளியே லிமோசின்களிலும் காடிலாக்குகளிலும் பயணம் செய்யக்கூடிய பணக்காரர்கள் பலர் அந்த விளம்பரங்களை வாசிக்கிறார்கள், மேலும் பல, ஏன் அவர்கள் சொல்கிறார்கள், "அது பிசாசு என்று எங்கள் போதகர் சொல்கிறார்" என்று, அவர்கள் அவரை

விசுவாசித்தார்கள். ஓ, அவர்கள் ஆரம்பத்தில் இருந்ததை விட நரகத்தின் இரண்டு மடங்கு குழந்தையாக மாறுவதில் ஆச்சரியமில்லை. நிச்சயமாக இது உண்மை.

75 இப்போது, இந்தச் சிறிய ராணி, "நான் சென்று கண்டறிவேன்" என்று சொன்னாள். நான் அதை விரும்புகிறேன். இப்போது, அவள் ஒரு தேவதூதனைக் காணச் செல்லவில்லை. உங்களுக்குத் தெரியுமா, தேவன் எதையாவது செய்வாரானால், அவர் அதை ஒரு தேவதூதன் மூலமாகத்தான் செய்ய வேண்டும், பரலோகத்திலிருந்து ஒரு தேவதூதனைக் கீழே அனுப்பி, அவனைச் செய்யவிட வேண்டும் என்று இன்று வரை மக்கள் தங்கள் மனங்களில் பதித்து வைத்திருக்கிறார்கள். தேவன் தேவதூதர்களை அனுப்புவதில்லை, மனிதனே தேவனுடைய ஊழியக்காரன், தேவன் மனிதன் மூலமாகவே நற்செய்தியைப் பிரசங்கிக்கிறார்.

76 எலியா என்பவன் நம்மைப்போலவே பாடுள்ள ஒரு மனுஷன்தான் என்று வேதாகமம் சொல்கிறது, அவன் ஒரு தேவதூதன் அல்ல, ஒரு மனிதன். அவன் மிகவும் மனிதனாக இருந்தான்,

உங்களுக்கும் எனக்கும் இருப்பதைப் போன்றே ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டிருந்தான், அது சாதாரண மக்களின், அல்லது, எல்லா மக்களின் தலைக்கு மேலாகச் செல்லும் வரை அப்படி இருந்தது.

77 இயேசு மிகவும் மனிதத்தன்மை கொண்டவராகவும், மிகவும் ஒரு மனிதனாகவும் இருந்தார், வெறும் ஒரு தச்சனின் பையன்தான், நமக்குத் தெரிந்தவரையில் உலகத்தின் எந்தக் கல்வியும் இல்லாத, ஓர் ஏழை மனிதர். "அவருக்கு இந்தக் கல்வி எங்கிருந்து கிடைத்தது?" நாம் இன்று பயன்படுத்துவது போல, அவர் சில—சில மெருகூட்டப்படாத இலக்கணமான, தன்னுடைய, மற்றும் இல்லை, தூக்கு, கொண்டுவா, மற்றும் சும போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அவர்கள், "இவன் எந்தப் பள்ளியிலிருந்து வந்தான்? இவனுக்கு எங்கிருந்து கல்வி கிடைத்தது? இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?" என்று சொன்னார்கள்.

78 ஏன், அவர் மிகவும் மனிதத்தன்மை கொண்டவராகவும், மிகவும் உண்மையான

வராகவும், மிகவும் தாழ்மையானவராகவும் இருந்தார், அது மக்களின் தலைக்கு மேலாகச் செல்லும் வரை, அவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. அது பிரதான ஆசாரியனாகிய காய்பாவாக இருந்திருந்தால், அல்லது யாராவது ஒரு பெரிய மெருகூட்டப்பட்ட அறிஞராக இருந்திருந்தால், ஓ, அவர்கள், "ஆம், உங்கள் கனத்திற்குரியவரே—கனத்திற்குரியவரே, மரியா தைக்குரியவரே, பிதாவே. ஆம், நாங்கள்—நாங்கள் அதை விசுவாசிக்கிறோம்" என்று சொல்லியிருப்பார்கள்.

79 ஆனால் தேவன் அதைத் தாழ்மைக்குக் கொண்டுவருகிறார், அது மக்களின் தலைக்கு மேலாகச் சென்றுவிடுகிறது. சரிதான். அப்படித் தான் அவர் எப்போதும் செய்திருக்கிறார்.

80 இப்போது, ராணி ஒரு தேவதூதனைக் காணச் செல்லவில்லை, தேவன் ஒரு வரத்தைக் கொடுத்திருந்த ஒரு மனிதனைக் காணச் சென்றாள், அது உண்மையில் சத்தியம் என நிரூபிக்கப்பட்டிருந்தது, எனவே அவள் கேள்விப்பட்டபடியே, அவள் செல்வதற்குத் தயாராக வேண்டியிருந்தது. இப்போது, அந்தப்

பாலைவனத்தை உங்கள் வரைபடத்தில் நீங்கள் அளந்துபார்த்தால் அது ஒரு நீண்ட பயணம், ஒட்டகத்தின் முதுகில் அந்தப் பயணத்தைச் செய்வதற்கு அவளுக்குக் குறைந்தது மூன்று மாதங்களாவது ஆகியிருக்கும்.

81 "சரி," நீங்கள் சொல்கிறீர்கள், "சிக்காகோ எனக்குச் சற்றே தொலைவாக இருக்கிறது, நான் வடக்குப் பகுதியில் வசிக்கிறேன், லேன் டெக் உயர்நிலைப் பள்ளிக்குக் கீழே உள்ளேன், மேலும் இது குளிர்காலம். நீங்கள் இதை இங்கேயுள்ள எனது சபைக்கு, அல்லது வீதியின் மறுபுறம் கொண்டுவந்தால், நான் ஒருவேளை ஒருமுறை வந்து பார்ப்பேன்."

அப்படியிருக்க, நீங்கள் பரலோகத்திற்குச் செல்கிறீர்களா? "ஓ, நிச்சயமாக. ஆம், ஐயா."

82 நீங்கள் கர்த்தரை நேசிக்கிறீர்கள், உங்களுடைய கிரியைகள் நீங்கள் செய்வதை நிரூபிக்கின்றன. அவர்களுடைய கனிகளாலே மக்கள் அறியப்படுகிறார்கள். ஏதாவது உங்கள் மடியில் வைக்கப்பட்டால், எப்படியாயினும், நீங்கள் அதை மதிப்பதில்லை. எதற்காக நீங்கள்

போராடி, தியாகம் செய்ய வேண்டியிருக்கிறதோ, அதிலிருந்துதான் நீங்கள் நிச்சயமாக மகிழ்ச்சியைப் பெறுவீர்கள்.

83 இப்போது, அந்தச் சிறிய ராணி சந்திக்க வேண்டிய ஒரு காரியம் இருந்தது, அவள் ஒரு பாலைவனத்தின் வழியாக மூன்று மாதங்கள் பயணம் செய்ய வேண்டியிருந்தது, இப்போதுள்ள குளிரூட்டப்பட்ட பெட்டியிலோ, அல்லது ஒரு காடிலாக் காரிலோ (Cadillac) அல்ல, மாறாக சூடான பாலைவனங்களின் வழியாக ஒரு ஒட்டகத்தின் முதுகின் மேல் பயணம் செய்தாள். எதற்காக? தேவன் அவளுடைய இருதயத்தோடு பேசிக் கொண்டிருந்தார், மேலும் இந்த வரம் சரியானதா இல்லையா என்பதைப் பார்க்க அவள் தீர்மானித்திருந்தாள், அங்கேதான் நீங்கள் இருக்கிறீர்கள். அது சரியானதா என்று கண்டறிய அவள் மூன்று மாதங்கள் பயணம் செய்தாள், ஆனால் இது சரியானதா இல்லையா என்று கண்டறிய மக்களால் ஒரு கூட்டத்தில் மூன்று நிமிடங்கள் அமர முடிவதில்லை, அதுதான் வித்தியாசம். கடைசி நாட்களில் அவள் எழுந்து இந்தச் சந்ததியை நியாயந்தீர்ப்பாள் என்று

இயேசு சொன்னதில் ஆச்சரியமில்லை. அது சரிதான்.

84 சூடான பாலைவனத்தின் வழியாக மூன்று மாதங்கள், ஒரு சொகுசான இருக்கையில் மூன்று நிமிடங்கள், என்ன ஒரு வித்தியாசம்! ஒட்டகத்தின் மேல் வருவது அல்லது காடிலாக்கில் வருவது, வித்தியாசத்தைப் புரிந்துகொள்கிறீர்களா? சேபா நாட்டு ராணி எழும்பும்போது நியாயத்தீர்ப்பு நாளில் இந்தச் சந்ததி என்ன பதிலளிக்கும்? நிச்சயமாக. இப்போதுள்ளதில் பாதி அளவுகூடச் சிறந்திராத ஒன்றை அன்று அந்த இஸ்ரவேலர்களின் கூட்டம் ஏற்றுக்கொண்டபோது, தேவனுடைய வரங்களை நிராகரித்த சபை என்ன சொல்லும்? அது என்ன சொல்லும்? கேளுங்கள்...

85 சாலொமோன் எங்கும் செல்லவில்லை, அவர்கள் சாலொமோனிடம் வந்தார்கள், அவர்கள் பசியோடிருந்தார்கள், அவர்கள் தாகமாயிருந்தார்கள், அவர்கள் விசுவாசித் தார்கள், மேலும் தேவன் கிரியை செய்து கொண்டிருந்தார். இன்று நாம் நிரப்பப்பட்டி ருக்கிறோம், போஷிக்கப்பட்டிருக்கிறோம்,

மேலும் எங்களுக்கு ஒன்றும் குறைச்சலில்லை என்று நாம் சொல்கிறோம், ஆனால் வேதாகமம் சொல்கிறது, "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப் படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறாயென்று அறியாதிருக்கிறாய்." அதுதான் மோசமான பகுதி, அது உங்களுக்குத் தெரியவில்லை.

86 ஒரு மனிதன் தெருவில் நிர்வாணமாகவும் குருடனாகவும் இருந்து, அதை அவன் அறிந்திருந்தால், அவன் தனக்குத்தானே உதவி செய்ய முயற்சிப்பான். ஆனால் அதை அவன் அறியாதிருக்கும்போது, அதுதான் பரிதாபமான பகுதி, அப்போது அந்த மனிதன் மனதளவில் சரியில்லை என்று அர்த்தம். மேலும் சபை ஆவிக்குரிய ரீதியில் சரியில்லை, அல்லது அது அதை அறியவில்லை. இயேசு சொன்னார், "நீங்கள் என்னை அறிந்திருந்தால், என் நாளையும் அறிந்திருப்பீர்கள்."

87 கவனியுங்கள், பின்பு அவள் தன் மனதில் தீர்மானித்த மற்றொரு காரியம் இருந்தது, நேற்றிரவு நான் சொன்னது போல, "இப்போது, எனக்குத் தெரியாது, நான் இதுவரை அதைப்

பார்த்ததில்லை," என்று நினைத்தாள். நீங்கள் தேவனுடைய கிரியையைப் பார்த்த பிறகு, நீங்கள் அதை நிராகரித்தபடியால் தேவன் உங்களை நியாயமாகத் தண்டிக்க முடியும்... தண்டிப்பார். மேலும் அவள் இதுவரை தேவனுடைய கிரியையைப் பார்த்திருக்க வில்லை, ஆனால் அவள் சொன்னாள், "இது உண்மையாக இருந்தால், என்னிடம் உள்ள எல்லாவற்றையும் கொண்டு நான் இதை ஆதரிப்பேன்." எனவே அவள் ஒட்டகங்களில் தங்கம், மற்றும் மற்ற அனைத்தையும், வெள்ளைப்போளத்தையும், தூபவர்க்கத்தையும் ஏற்றினாள். அந்த வரம் உண்மையிலேயே சரியானதாக இருந்தால், அவள் அதை ஆதரிக்கப் போகிறாள். அது சரிதான்.

88 மேலும் தேவனுடைய வரங்கள் சரியானவையாக இருந்தால், நீங்கள் அதை நிதி ரீதியாக அவ்வளவு ஆதரிக்க வேண்டியதில்லை, ஆனால் நீங்கள் தேவனைத் துதிப்பதன் மூலமும், சாட்சியின் மூலமும், மக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துவதன் மூலமும், தேவனுடைய மகிமைக்காக ஏதாவதொன்றைச் செய்வதன் மூலமும் அதை ஆதரிக்க வேண்டும்.

உங்கள் பணம் அல்லது அதுபோன்றவை மட்டுமல்ல, உங்களுக்குள் இருக்கும் அனைத்தையும் கொண்டு நீங்கள் கர்த்தருடைய வேலையை ஆதரிக்க வேண்டும்.

89 அவள் ஒட்டகங்களில் சுமைகளை ஏற்றினாள், அவள் செல்லும்போது, நினைவில் கொள்ளுங்கள், அந்த ஒட்டகங்களில் அந்த எல்லாத் தங்கத்தோடும், ஆயிரக்கணக்கான டாலர்கள் மதிப்புள்ள தங்கத்தோடும், விலையேறப்பெற்ற ஆபரணங்களோடும், வெள்ளைப்போளத்தோடும், தூபவர்க்கத்தோடும், மிகவும் விலையுயர்ந்த வாசனைத் திரவியங் களோடும் சென்றாள், அது சரியானதா என்று பார்க்க அவள் சென்றபோது, அவள் அதை ஆதரிக்கப் போகிறாள். இப்போது, அவள் எவ்வளவு பெரிய ஆபத்தை சந்திக்க வேண்டியிருந்தது என்று பாருங்கள்: பாலைவனத்தில் உள்ள அந்த எல்லாத் திருடர்களும் அவளுக்காகவே காத்திருந்தார்கள்.

90 ஆனால் தேவன் உங்கள் இருதயத்தை அழைத்திருந்தால், உங்களைக் கிறிஸ்து விடமிருந்து விலக்கி வைக்க இந்த உலகத்தில்

எதுவுமே போதுமானதல்ல. நீங்கள் உங்கள் சபையிலிருந்து நீக்கப்படுவீர்கள் என்ற எல்லா அச்சுறுத்தல்களும், உங்கள் வேலையிலிருந்து உங்களை நீக்குவார்கள் என்ற எல்லா அச்சுறுத்தல்களும், நாம் உண்மையில் நமது இருதயத்தில் சரியாகும்போதும், தேவன் இதைச் செய்தாரா என்பதைக் கண்டறியும் உண்மையான நோக்கத்திற்காகச் செல்கிறோம் என்ற நமது நோக்கம் சரியாக இருக்கும்போதும், நம்மைப் பிரிக்கவோ அல்லது நமது இலக்கை அடைவதிலிருந்து நம்மைத் தடுக்கவோ எதனாலும் முடியாது.

91 இயேசு மரித்தோரிலிருந்து எழுந்திருந்தால், நாம் அதை ஆதரிப்போம்; அவர் நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராக இருந்தால், நாம் அதிலே நிலைத்திருப்போம், மக்கள் தேவனுடைய ராஜ்யத்தைக் காணச் செய்ய நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

92 அவள் பாலைவனத்தைக் கடக்க வேண்டியிருந்தது, எனவே அவள் பயணப் பட்டாள். இப்போது, நீங்கள் தீர்மானமாக

இருந்தால், அது சரியான காரியமாக இருந்தால், தேவன் ஒரு வழியை உண்டாக்குவார். சிறிது நேரத்திற்குப் பிறகு, பாலைவனத்தின் குறுக்கே ஒட்டகங்களைக் காண்கிறோம், அந்தப் பாவம் சிறிய பெண் அங்கே அமர்ந்திருக்கிறாள், பாலைவனக் காற்றுகள் வீசுகின்றன, அவளுடைய உதடுகள் வறண்டு போகின்றன, ஆனால் அவளுடைய கண்கள் தேவன் மீது நோக்கமாயிருந்தன. ஒட்டகங்கள் வழியில் இடறி நடந்தாலும், அவளிடம் இருந்த ஒரு சிறிய பாதுகாப்புப் படையை, இஸ்மவேலர்கள் நிறைந்த அந்தப் பெரிய பாலைவனம் ஒரு நொடியில் அவர்களை அழித்திருக்க முடியும், ஆனால் அவளுடைய இருதயம் உறுதியாக இருந்தது, "ஒரு யெகோவா தேவன் இருந்து, அவர் தன்னை வெளிப்படுத்துவாரானால், நான் அவருடைய அடியாட்டியாக இருக்க விரும்புகிறேன்."

93 அது அங்கே இருக்கிறது. நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்தக் குழு முன்னேறிச் சென்றபோது பல்லாயிரக்கணக்கான தூதர்கள் அதனுடன் அணிவகுத்துச் சென்றார்கள். இரவில் பறக்கும் அம்போ, அல்லது இரவின்

பயங்கரமோ, அல்லது பகலில் பறக்கும் அம்போ அவளைத் தொடவே முடியாது. அவள் யெகோவாவைக் கண்டடைய உறுதியாக இருந்தாள், அவள் உண்மையான இருதயத்தோடு அவரைத் தேடிக்கொண்டிருந்தாள்.

94 இதன் எளிமையை நீங்கள் காண்பீர்களானால், அவர் உங்களுக்கும் அப்படியே செய்வார். இல்லை... தேவன் ஒருவித பெரிய ஆடம்பரத்தில் பிரகாசிப்பதில்லை, அவர் ஒருபோதும் அப்படிச் செய்வதில்லை. மகிமையிலிருந்து அவர் தன்னை வெளிப்படுத்தும்போது அதற்கான அவருடைய பெரிய வேளை வரவிருக்கிறது, ஆனால் இன்று அவர் எப்போதும் செய்ததைப் போலவே காரியங்களைச் செய்யத் தாழ்மையில் கிரியை செய்கிறார்.

95 இதோ அவள் செல்கிறாள், காற்றுகள் வீசுகின்றன, பாலைவனங்கள் சூடாக இருக்கின்றன, ஆனால் அவள் உன்னத அழைப்பின் இலக்கை நோக்கி முன்னேறுகிறாள். அவள் போய் சேரப்போகிறாள், ஏனென்றால் அவள் போய் சேருவதைத் தேவன்

பார்த்துக்கொள்வார். இதோ அவள் செல்கிறாள், இந்த எல்லா மனிதர்களின் கூட்டத்தோடும் தன்னைச் சுற்றியுள்ள தனது சிறிய வேலைக்காரிகளோடும் அந்தச் சிறிய பெண், பாலைவனத்தின் வழியே அவர்கள் சென்றார்கள்.

96 அமர்ந்து ஓய்வெடுக்க அங்கே நிழலான இடங்கள் எதுவும் இல்லை, அவள் தன் தலைக்கு மேல் ஒரு சிறிய விதானம் போன்ற ஒன்றின் கீழே மட்டுமே இருந்தாள். அந்தப் பழைய ஒட்டகம் பாலைவனத்தின் குறுக்கே முன்னும் பின்னுமாக அசைந்து சென்றபோது, அங்கே அமர்ந்திருந்த அந்தச் சிறிய பெண், இரவும் பகலும், கொடிய ஆபத்துகள், பாலைவனத்தில் உள்ள சிங்கங்கள் மற்றும் மிருகங்கள் வழியாகப் பக்கவாட்டில் குலுங்கிக்கொண்டே சென்றாள், ஆனால் அவள் முன்னேறினாள், அவள் தனது வழியில் எதையும் குறுக்கே நிற்க அனுமதிக்கவில்லை.

97 உலகில் உள்ள எல்லா பிஷப்புகளும், வேதபாரகர்களும், பேராயர்களும் அவளைத் தடுத்திருக்க முடியாது, அது சரியா அல்லது தவறா என்பதைக் கண்டறிய அவள்

தீர்மானித்திருந்தாள். இந்தச் சந்ததியுடன் அவள் நியாயத்தீர்ப்பில் நிற்பாள் என்பதில் ஆச்சரியமில்லை. அது சரியானதா இல்லையா என்பதைக் கண்டறிய அவள் தீர்மானித்திருந்தாள்.

98 அவள் தொடர்ந்து சென்றாள், இறுதியாக, வழியால் நடத்தப்பட்டு, ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, அவள் வந்தாள்...

99 "ஆவியானவரால் வழிநடத்தப்பட்டாள் என்று சொன்னீர்களா?"

100 நிச்சயமாக. தேவனை நோக்கி ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தும் ஒவ்வொரு நபரும் ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறார்கள். நிச்சயமாக, அவள் வழிநடத்தப்பட்டாள். மேலும் பெரிய தூதர்கள் அவளை எருசலேமின் வாசல்களுக்கு நேராக வழிகாட்டினார்கள்.

101 அவள் தேவாலயத்திற்குச் சென்றபோது, இப்போது, அவள் சில நிமிடங்கள் அமர்ந்து கண்டறிவதற்காக மட்டும் செல்லவில்லை, அவள் ஒரு நாள் மட்டும் தங்குவதற்காகச் செல்லவில்லை, அவள் அவசரமாகத் தன்

ராஜ்யத்திற்குத் திரும்ப வேண்டியதிருந்தாலும், அவள் நம்பும் வரை தங்குவதற்குச் சென்றாள். அப்படித்தான் அதைச் செய்ய வேண்டும், நீங்கள் நம்பும் வரை காத்திருங்கள்.

102 அவள் ஒட்டகங்களிலிருந்து சுமைகளை இறக்கினாள், தன் கூடாரங்களை அமைத்தாள், மற்றும் பலவற்றைச் செய்தாள், தான் கேள்விப்பட்ட காரியங்கள் உண்மையா என்பதைக் கண்டறியக் கூட்டத்தில் சில காலம் அமர்ந்திருக்கும் வரை அவள் தனது பொக்கிஷங்களை வெளிப்படுத்தாமல் வைத்திருந்தாள். நிச்சயமாக, அது சரி என்று விசுவாசிப்பதற்கான விசுவாசம் அவளுக்கு இருந்தது, ஆனால் அது சரியானதா இல்லையா என்பதை அவள் பார்க்க விரும்பினாள்.

103 எனவே மறுநாள் காலையில் சாலொமோன் அமர்ந்திருந்த கூட்டத்திற்கு அவள் சென்றபோது, அவர்கள் காரியங்களை அவனிடம் கொண்டு வந்தார்கள், அவள் சாலொமோனைக் கவனிக்கத் தொடங்கினாள், அவன் ஒரு சாதாரண மனிதன் என்பதை அறிந்தாள். ஆனால் தேவ ஆவியானவரின்

மகத்தான பகுத்தறிதல் அந்த மனிதனின் மூலம் கிரியை செய்வதை அவள் கண்டாள்.

104 கூட்டத்துக்குப் பின் கூட்டமாக அவள் அதைக் கவனித்தாள், அவள் முகாமிட்டுக் கவனித்தாள், இறுதியாக அவள் முழுமையாக நம்பியபோது, அவள் சென்று தன்னிடம் இருந்த எல்லாப் பொக்கிஷங்களையும், எல்லா வற்றையும் கொண்டு வந்து, அவற்றைச் சாலொமோனின் பாதங்களில் வைத்தாள். அவள் சொன்னாள், "அந்தப் பரிசுத்தவான்கள் சாட்சி சொன்னதாக நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை, மேலும் அவர்கள் சொன்னதாக நான் கேள்விப்பட்டதை விட இது அதிக உண்மை." ஏன்? ஒரு புறஜாதிப் பெண்ணான அவளுக்கு அது அப்போது வெளிப்பட்டதால் அது அதிகமாக இருந்தது.

105 இன்றைய பிரஸ்பிடீரியன்கள் (Presbyterians), பாப்டிஸ்டுகள் (Baptists), மெத்தடிஸ்டுகள் (Methodists), கத்தோலிக்கர்கள் (Catholic), பெந்தெகொஸ்தேக்கள் (Pentecostal), நசரேயர்கள் (Nazarenes), பில்கிரிம் ஹோலினெஸ் (Pilgrim Holiness), செவன்த் டே

அட்வென்டிஸ்டுகள் (Seventh Day Adventists), கிறிஸ்டியன் சயின்ஸ் (Christian Science) ஆகியோருக்கு எதிராக நியாயத்தீர்ப்பில் அவள் நிற்கட்டும். அவர்கள்... வேதத்தை தினமும் வாசித்துப் ஜெபிக்க வேண்டிய மக்களுக்கு எதிராக, அவள் ஒரு புறஜாதியாராக இருந்தபோதிலும் அந்த நாளில் நிற்கட்டும், இந்த நாளின் மக்களுக்கு எதிரான அவளது சாட்சியைக் கவனியுங்கள். ஆம், ஐயா.

106 அவள் ஒரு புறஜாதிப் பெண், ஆனால் அவள் வந்தாள், தேவன் கொடுத்த அந்தப் பெரிய வரம் உண்மை என்று அவள் கண்டுகொண்டபோது, அவள் தன் சொந்தக் கண்களால் அதைப் பார்த்ததால், அது உண்மை என்று அப்போது அறிந்தாள். மேலும் அவள் நியாயத்தீர்ப்பு நாளில் எழுந்து ஆசாரியர் களையும், பிரசங்கிகளையும், மதம் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களையும் நியாயந் தீர்ப்பாள் என்றும், அவரைப் பிசாசு என்று அழைத்த இந்தச் சந்ததியை அவள் நியாயத்தீர்ப்பு நாளில் எழுந்து நியாயந்தீர்ப்பாள் என்றும் இயேசு சொன்னார். அதைச் சிந்தித்துப் பாருங்கள்.

107 நாம் வாழும் இந்த நாளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். என் சகோதரனே, சகோதரியே, மற்றும் என் நண்பனே, தேவன் எப்பொழுதும், ஒவ்வொரு சந்ததியிலும் தம்மைத்தாமே வெளிப்படுத்துகிறார். மக்கள் தங்கள் சிறிய வேறுபாடுகளை மறந்துவிட்டு, கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஒன்றிணைந்தால், அது எவ்வளவு பெரிய காரியமாக இருக்கும்! ஆனால் இந்த நாளில் அவர் தம்மை மீண்டும் வெளிப்படுத்த வரும்போது, எல்லா வழிகளிலும், அவர் அப்போது செய்ததை விட அதிகமாக...

108 இயேசு கலிலேயாக் கடலின் கரைகளில் நின்றார், எருசலேமிலும், நகரத்திலும் நின்று அவர் அறிவித்தார், "என்னால்தானே நான் எதையும் செய்ய முடியாது. முதலில் பிதா எனக்குக் காண்பிக்கிறார், அவர் சொல்வதை நான் செய்கிறேன். ஆனால் நான்..."

109 அவரால் அதைச் செய்ய முடியும் என்பதை அவர்கள் கண்டார்கள், எனவே அவர் ஒரு ஆவியுலகவாதி என்று நினைத்தார்கள், ஆனால் அது நிறைவேறுவதை அவர்கள்

கண்டபோது, அவர் ஆவியுலகவாதியாக இருக்க முடியாது என்பதை அறிந்திருந்தார்கள், ஆனால் அவர்களுடைய பெரிய சபை அந்தஸ்து மற்றும் பல காரியங்கள், அதை ஏற்றுக்கொள்வதிலிருந்து அவர்களைத் தடுத்து நிறுத்தின.

110 நிக்கொதேமு இதை நன்றாக வெளிப்படுத்தினான், அவன் சொன்னான், "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தேவன் தன்னுடனே இராவிட்டால் நீர் செய்கிற இந்த அற்புதங்களைச் செய்ய மாட்டான், அதை நாங்கள் அறிந்திருக்கிறோம்."

111 சரி, நீங்கள் ஏன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை? அவர்கள் ஏன் சனகெரிப் சங்கத்தை, பரிசேயர்களை, சதுசேயர் களை மற்றும் அனைவரையும் விடுவித்து, "செல்லுங்கள். இவரே மேசியா!" என்று சொல்லவில்லை? ஏனென்றால், அது அவர்களுடைய பிரிவினைகள், மற்றும் அவர்களுடைய பெருமை, மேலும் பல... [ஒலி நாடாவில் காலி இடம்]... அவர்கள்

நினைத்தபடி படிப்பறிவில்லாத ஒரு நபரிடம் அவர்களைச் செல்ல அனுமதிக்கவில்லை.

112 அவர் தேவனுடைய அறிவைக் கொண்டிருந்தார், உலகத்தின் அறிவு அவருக்குத் தேவைப்படவில்லை. எனவே மோசேயிடம் அவர் செய்ய வேண்டியிருந்ததைப் போலவே, அவருக்குள் கிறிஸ்துவின் அறிவைக் கொண்டுவருவதற்கு முன்பாக, உலகத்தின் அறிவு முழுவதையும் முதலில் அவரிடமிருந்து வெளியேற்றத் தேவன் அவருக்குள் கிரியை செய்திருந்தார். ஆனால் இன்று நாம் உலகத்தின் அறிவை உள்ளே திணிக்கவும், கிறிஸ்துவின் அறிவை வெளியே தள்ளவும் முயற்சிக்கிறோம், அது சரிதான், எல்லா வகையான பட்டங்களாலும் அது மறைக்கப்பட்டிருக்கிறது. இப்போது, இன்று, நண்பனே, தேவன் இன்னும் வாழ்கிறார். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவரா யிருக்கிறார்.

113 மேலும் இப்போது, அவர் அங்கே என்ன சொன்னார், "இதோ, நான் உங்களுக்குச் சொல்கிறேன், சாலொமோனிலும் பெரியவர்

இங்கே இருக்கிறார்," என்று, ஆனால் அவர்கள் அதைப் பிசாசு என்று அழைத்தார்கள். மேலும் இப்போது, அவர் சொன்னார், "நான் செய்யும் இந்தக் காரியங்கள், எனக்குப் பிறகு வரும் மற்றொரு சந்ததிக்கு அறிவிக்கப்படும், இந்த மந்தையைச் சேராத வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் உலகத்தின் முடிவு பரியந்தமும் உங்களுடனே, உங்களுக்குள்ளேயும் இருப்பேன். நான் செய்யும் காரியங்களை நீங்களும் செய்வீர்கள்." இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராயிருக்கிறார்.

114 அவர் வாக்குத்தத்தம் செய்த இந்த எல்லாக் காரியங்களும், அதுமட்டுமல்லாமல் நமது எந்திரத்தனமான யுகத்தில் இறங்கி வந்து, நாம் விஞ்ஞானப்பூர்வமாக வாழும் நாட்களில், அவர் மாறாதவர் என்பதை ஒரு விஞ்ஞானப் புகைப்பட இயந்திரத்தின் மூலம் நிரூபித்தார். அப்படியென்றால் நாம் என்ன செய்யப் போகிறோம்? இதோ அது: அந்தத் தூதன் இயேசு கிறிஸ்துவின் கிரியைகளைச்

செய்யாவிட்டால், அது தவறான தூதன்; ஆனால் அது இயேசு கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்தால், அது சரியான தூதன். அது சரிதான். ஏனெனில் அவர் நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராயிருக்கிறார்.

115 அவர் மாறாதவர் என்பதை யூதர்கள் எப்படி அறிந்தார்கள்? பிலிப்பு சென்று அழைத்து வந்த, நித்திய ஜீவனுக்கு முன்குறிக்கப்பட்டிருந்த அந்த யூதனிடம், அந்த உண்மையான யூதனிடம் அவர் சொன்னபோது, அவன் அவரை அங்கே கொண்டு வந்தான், அவன் இயேசுவைக் கண்டபோது, அவர், "கபடற்ற இஸ்ரவேலன்!" என்றார். அவன் சொன்னான், "ரபீ, என்னை உமக்கு எப்படித் தெரியும்?"

அவர் சொன்னார், "பிலிப்பு உன்னை அழைப்பதற்கு முன்பே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது, உன்னைக் கண்டேன்." [ஒலி நாடாவில் காலி இடம்]

116 இன்று நாம் இருப்பதைப் போல, புறஜாதிகளின் சந்ததிக்கு அவர்களுடைய

நாட்களில் அவர் என்ன செய்வார்? யூதர்களுக்குத் தம்மை நிரூபிக்க அவர் அதைச் செய்தார், சமாரியர்களுக்கு அதை நிரூபிக்க அவர் அதைச் செய்தார். புறஜாதிகளுக்கு அதை நிரூபிக்க அவர் என்ன செய்வார்? அவர் யூதருக்கும் சமாரியருக்கும் எப்படி மாறாதவராக இருக்கிறாரோ, அதேபோலப் புறஜாதிகளுக்கும் அவர் மாறாதவராக இருக்கிறார். புறஜாதிகள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் செய்ததைப் போலவே செய்கிறார்கள்.

117 உலகத்தில் பெரிய அறிஞர்கள், மற்றும் சடங்காச்சாரிகள், உயர்குடியினர், மற்றும் பலர், படித்தவர்கள், புத்திசாலிகள், மற்றும் அப்படிச் சொல்லப்படுபவர்கள், அவர்கள் சொல்கிறார்கள், "இது பிசாசு, இதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இது ஒரு கூட்ட ஹோலி-ரோலர்ஸ் (holy-rollers), இதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை."

118 ஆனால் பெரிய உயிர்த்தெழுதலில் தேவன் அந்த ஹோலி-ரோலர்ஸ் கூட்டத்தை எடுத்து, உலகத்தை நியாயந்தீர்ப்பார். அது முற்றிலும் சரி. நிச்சயமாக. ஏனென்றால்

அவர்கள் விசுவாசித்தார்கள், ஏனென்றால் அவர்கள் அதை வேதாகமத்தில் வாசித்திருக் கிறார்கள், மேலும் அவர்கள் அதைத் தாங்களே பார்த்திருக்கிறார்கள், இந்தக் கடைசி நாட்களில் அசைகிற தேவனுடைய பெரிய வரங்களை அடையாளம் கண்டுகொள்ள அவர்கள் குளிர்ந்த காற்றுகளின் வழியாகவும், பனியின் வழியா கவும், மற்றும் எல்லாவற்றின் வழியாகவும் வந்திருக்கிறார்கள். மேலும் அவர்கள், "ஓ, இது என் ஆண்டவரும் என் தேவனுமாயிருக்கிறார்" என்று சொல்கிறார்கள். நாம் ஜெபிப்போம்.

119 ஆண்டவரே, ஒவ்வொரு சந்ததியிலும் எங்கள் அடைக்கலமே, நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவரே, ஓ நித்தியமான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட தேவனே, நாங்கள் இப்போதே இங்கிருந்து எழுந்து எங்கள் வீடுகளுக்குச் செல்வோமானால், உம்முடைய வார்த்தையை நாங்கள் விசுவாசிப்பதால், நாங்கள் சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் செல்ல முடியும்.

120 ஆனால் ஒரு நாள் எருசலேமிலிருந்து எம்மாவுக்குச் சென்றவர்களைப் போல, இங்கே

யாராவது கொஞ்சம் மனமுடைந்து காணப்பட்டால், இன்றிரவு நாங்கள் கேட்கிறோம்... நீர் வழியில் அவர்களோடு நடந்து சென்று, அவர்களோடு பேசி, அவர்களுக்குப் பிரசங்கித்தீர், வேதவசனங்களை விளக்கும் ஒரு வித்தியாசமான வழியை நீர் கொண்டிருப்பதாக அவர்கள் நினைத்தார்கள், ஏனென்றால் அவர்கள் பின்னர் சொன்னார்கள், "வழியிலே அவர் நம்முடனே பேசியபோது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?"

121 ஆனால், நீர் அவர்களை அந்தச் சிறிய கட்டிடத்திற்குள் கொண்டுவந்து கதவை மூடியபின், நீர் சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுவதற்கு முன்பு செய்தது போலவே எதையோ செய்தீர். அது நீர்தான் என்று அவர்கள் அறிந்துகொண்டார்கள், ஏனென்றால் உம்மைத் தவிர வேறு யாராலும் அப்படிச் செய்ய முடியாது, அவர்கள் அது கர்த்தர் என்று சொன்னார்கள், அவர்கள் அந்தச் செய்தியோடு திரும்பி விரைந்தார்கள்.

122 தேவனாகிய கர்த்தாவே, இன்றிரவும் எங்களுக்காக அதையே செய்தருளும். எந்த மனிதனாலும் செய்ய முடியாத, உம்மால் மட்டுமே செய்யக்கூடிய ஒன்றை எங்களுக்குத் தாரும், அதினால் அவர்கள் குளிர்ந்த காற்றைக் குறித்து சிறிதும் கவலைப்படாமல், நெருப்பினால் நிரப்பப்பட்ட ஆத்துமாக்களோடு, "நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா? நமக்குத் தக்க பலன் கிடைக்கவில்லையா? பிரசங்கியார் பிரசங்கித்ததாலோ அல்லது பாடகர் குழு பாடியதாலோ அல்ல, ஆனால் இயேசு தமது மக்களின் மூலமாகத் தம்மை வெளிப் படுத்துவதை நாம் பார்த்ததால் தான்" என்று சொல்லிக்கொண்டே காற்றில் திரும்பிச் செல்வார்களாக.

123 நித்திய தேவனே, இதை எங்களுக்கு அருளும், ஏனென்றால் நாங்கள் உம்மை நேசிக்கிறோம், மேலும் இங்கு எங்கள் வாழ்க்கை முடிவடையும் போது என்றாவது ஒரு நாள் உம்மைச் சந்திக்க விரும்புகிறோம், அப்போது, "ஒரு சிறந்த உலகத்திற்கும் சிறந்த இடத்திற்கும் மேலே ஏறி வாருங்கள்" என்று

சொல்லும் அந்தச் சத்தத்தை நாங்கள் கேட்போம்.

124 நாங்கள் இங்கே இருக்கும்போதே, ஆண்டவரே, இந்த இருண்ட வேளையில், பெரும் அழிவு தாக்கி இந்த நகரங்கள் வெறும் தூளாக மாறுவதற்கு சற்று முன்பு பிரகாசிக்கும் விளக்குகளாக நாங்கள் இருப்போமாக. ஆண்டவரே, உம்முடைய... எப்பொழுதும் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நீர் இரக்கத்தை அனுப்புகிறீர், மக்கள் அதை நிராகரிக்காமல் இருப்பார்களாக. இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

125 இப்போது, மக்களே, நான்... நான் இல்லை, எனக்குத் தெரிந்த காரியங்களை, என் இருதயத்தில் நான் உணரும் காரியங்களை என்னால் விளக்க முடியாது, என்னால் அதை வெளிப்படுத்த முடியாது. நான் படித்தவனல்ல, பிரசங்கிப்பதற்கு நான் எந்தப் பள்ளியிலும் பயிலவில்லை, எனவே என் செய்தியை அது இருக்க வேண்டிய விதத்தில் என்னால் அமைக்க முடியவில்லை. மேலும் நீங்கள்... நான்... அதற்காக என்னை மன்னியுங்கள். ஆனால்

பொதுவாக, சகோதரர் பாக்ஸ்டர் (Baxter), அவர்களில் சிலர் சென்று விளக்குகிறார்கள், மேலும் அவர்கள் அறிஞர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் இருக்கும் பிரசங்கிகள், அறிஞர்கள் மட்டுமின்றி கிறிஸ்தவர்கள், மறுபடியும் பிறந்த மனிதர்கள். மக்கள் அதைப் புரிந்துகொள்ளும் விதத்தில் தங்கள் பிரசங்கங்களை எப்படி முறைப்படுத்த வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்.

126 இப்போது, அது என்னுடைய வரம் அல்ல, நான்-என்னால் அதைச் செய்ய முடியாது, என் வரம் என்பது கிறிஸ்து நடைபெறும் என்று வாக்களித்த தரிசனத்தின் மூலமானதாகும். புரிகிறதா? மேலும் எனக்கு கல்வியறிவு இல்லை என்பதையும், மற்றும் பலவற்றையும் அறிந்திருந்தும், ஒருவேளை, ஒருவேளை என்று நான் சொல்லமாட்டேன், எனக்கு எந்தக் கல்வியறிவும் இருக்கக்கூடாது என்று அவர் நோக்கங்கொண்டிருந்தார் என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் நான் சார்ந்திருக்கின்ற-நான் சார்ந்திருக்கின்ற ஒன்றைக் காட்டிலும், அநேகமாக அதையே நான் சார்ந்திருந்திருப்பேன், அவரிடமிருந்து வரும்

ஒவ்வொரு வார்த்தைக்காகவும் நான் பயபக்தியுடன் காத்திருக்கிறேன்.

127 இப்போது, அவர் தம்மை வெளிப்படுத்துவார் என்று நான் நம்புகிறேன். அப்படி அவர் செய்தால், அது உங்களை இலகுவான இருதயத்தோடு வீட்டிற்குச் செல்லவும், அவரை அதிகமாக நேசிக்கவும், களிகூரவும் செய்யுமா? அது அப்படிச் செய்யுமென்றால், அவரை நோக்கி உங்கள் கைகளை உயர்த்துவீர்களா, அவர் யார்...? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

128 ஜீன் (Gene) இங்கே இருக்கிறாரா, மேலும்-மேலும், ஜீன் கோட் (Gene Goad) மற்றும் பில்லி (Billy)? இங்கே இருக்கிறார்கள், சரி. நான்... பார்க்கலாம், என்ன...? நேற்றிரவு நாம் ஒன்றிலிருந்து நூறு வரை இருந்தோம், நாம் ஒன்றிலிருந்து ஆரம்பித்தோம் என்று நான் நம்புகிறேன். நாங்கள் ஒருபோதும் அதிகமானோரை அழைப்பதில்லை, ஒருவேளை பத்திலிருந்து பதினைந்து வரை, அதுபோல, போதுமான அளவுக்கு... நீங்கள் இல்லை...

அதனால் எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை.

129 கிணற்றருகே இருந்த அந்தப் பெண், தான் கேட்டுக்கொண்டிருந்த காரியங்களுக்கு தன்னை உண்மையிலேயே அர்ப்பணிக்காமல் இருந்திருந்தால், ஏன், அது அவளுக்கு எந்த நன்மையையும் செய்திருக்காது.

130 அங்கே நின்று, இயேசு அவர்களுடைய சிந்தனைகளைப் பகுத்தறிந்து அந்த அற்புதங் களைச் செய்வதைப் பார்த்த பரிசேயர்கள், "உங்கள் இருதயங்களில் நீங்கள் ஏன் சிந்திக்கிறீர்கள்? ஏன் என்னை பெயெல்செபூல் என்று அழைக்கிறீர்கள்?" என்று அவர்களிடம் அவர் சொன்னார். அவர்கள் அதை ஒருபோதும் வெளியே சொல்லவில்லை, ஆனால் அவர் அவர்களுடைய இருதயங்களை அறிந்திருந்தார், அதை அவர்களிடம் சொன்னார்.

131 வேதாகமம் முழுவதும், எல்லா இடங்களிலும் அவருடைய ஊழியத்தைப் பாருங்கள். அவர் சாதாரணமாக வெளியே நடந்துவந்து, "இதோ நான் இதைச்

செய்யப்போகிறேன்" என்று சொல்லவில்லை. "பிதா முதலில் எனக்குக் காண்பிக்கும்வரை நான் ஒன்றும் செய்வதில்லை" என்று அவர் சொன்னார். புரிகிறதா? அது சரிதான். பரிசுத்த யோவான் 5:19. அவருடைய அற்புதங்களைக் கவனியுங்கள், அது... மக்களால் அதைச் செய்ய முடியும்.

132 மேலும் இங்கே மேடையில் செய்யப் படும் இந்தக் காரியங்கள் உண்மையில் துல்லியமாக தரிசனங்கள் அல்ல, ஆனாலும் அது அப்படித்தான், அது தேவனைச் சென்றடைந்து, நீங்கள் விரும்பும் காரியங்களை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உங்க ளுடைய விசுவாசமே ஆகும்.

133 இரத்தப்போக்குள்ள அந்தப் பெண்ணைப் பாருங்கள், அவள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டுவிட்டு மீண்டும் கூட்டத்திற்குள் சென்றுவிட்டாள். பின்னர், இயேசு, "என்னைத் தொட்டது யார்?" என்றார். அவர்களுக்குத் தெரியாது, தம்மைக் தொட்டது யார் என்று அவருக்கும் தெரியாது. பின்பு அவர், "நான் பலவீனமானேன்" என்றார். யாரோ

தன்னைத் தொட்டதை அப்போது அவர் அறிந்துகொண்டார், அது அந்தப் பெண் தேவனுடைய வரத்தைப் பயன்படுத்தியதாகும். அவள் தேவனுடைய வரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள், அதைப் பற்றி இயேசுவுக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவள் அதைத் தொட்டபோது, அவள் யாரென்று கண்டு பிடிக்கும் வரை அவர் கூட்டத்தில் தேடினார்.

134 அவளுடைய விசுவாசத்திற்கு பதிலளித்த தேவனுடைய வரமே அதுவாகும். நீங்கள் அதைப் பார்க்கிறீர்களா? அவள் அதை விசுவாசித்தாள், அவளே தேவனுடைய வரத்தைப் பயன்படுத்தினாள், பின்பு அவருக்குள் இருந்த வரம் விசுவாசமுள்ள அந்த நபரிடம் பேசி, அவளுடைய பிரச்சனை என்னவென்று அவளிடம் சொன்னது, பின்பு அவளுடைய- அவளுடைய விசுவாசம் அவளை இரட்சித்தது என்று அது சொன்னது.

135 ஆனால் இப்போது, தேவன் தமது வரத்தைப் பயன்படுத்த விரும்பியபோது, அவர் இயேசுவை அழைத்து, "இப்போது, நீ பெத்தானியாவிலுள்ள இந்த வீட்டை விட்டுச்

செல். நான்கு நாட்களுக்குப் பிறகு, லாசரு மரிக்கப்போகிறான், அதன் பிறகு நீ திரும்பி வந்து அவனை உயிர்ப்பிப்பாய்" என்றார். ஆக, இயேசு சென்றுவிட்டார், அவர்கள் அவரை வரும்படி ஆள் அனுப்பினார்கள், ஆனால் வரக்கூடாது என்று தரிசனம் சொல்லியதை அவர் அறிந்திருந்தார், ஏனென்றால் பிதா தமக்குக் காண்பிக்கும்வரை தாம் ஒன்றும் செய்வதில்லை என்று அவர் சொல்லியிருந்தார். நான்கு நாட்களுக்குப் பிறகு அவர், "லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்றார்.

"அவன் நித்திரையடைந்திருந்தால், அவன் குணமடைவான்" என்று கூறப்பட்டது.

அவர், "அவன் மரித்துப்போனான். நான் அங்கே இராததைக் குறித்து உங்களுக்காகச் சந்தோஷப்படுகிறேன், ஆயினும் அவனை எழுப்புவதற்குப் போகிறேன்" என்றார். அது சரிதான்.

மேலும் கல்லறையினிடத்தில் அவர், "பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்த படியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், சூழநிற்கும் ஜனங்களுக்காக இதைச்

சொன்னேன்" என்றார். அவர் ஜெபிக்க வேண்டியதில்லை, ஆனால் அவர் அதை அறிந்திருந்தார்.

136 இப்போது, தாம் அங்கே பலவீனமானதாக அவர் ஒருபோதும் சொல்ல வில்லை. அந்தப் பெண் யார் என்று கண்டு பிடிப்பதை விட மரித்தோரை உயிர்ப்பிக்கும் தேவனுடைய வல்லமை எவ்வளவு பெரியது? ஆனால் அது ஒரு பெண் தேவனுடைய வரத்தைப் பயன்படுத்துவதாகும், அல்லது தேவன் தமது சொந்த வரத்தைப் பயன்படுத்துவதாகும்.

137 (சரி.) சரி. ஜெப அட்டை, ஜோசப் (Joseph) அதைக் கண்டறியச் சென்றார். ஜெப அட்டை T என்று அவர் சொன்னார் என நம்புகிறேன். மேலும் நேற்று இரவு நாம் ஒன்றிலிருந்து பதினைந்து வரை பார்த்தோம், எனவே இன்றிரவு எண்பத்தைந்திலிருந்து நூறு வரை எடுத்துக்கொள்வோம், அவற்றின் கடைசிப் பகுதியை எடுப்போம், இப்போது, அது இன்றிரவு நமக்கு பதினைந்து நபர்களைத் தரும்.

138 இப்போது, ஒருவேளை நாளை இரவு நாம் ஆரம்பிக்கலாம், சரி, நான் சொல்ல மாட்டேன். புரிகிறதா? நாளை இரவு வரை காத்திருப்போம். மேலும்...

139 J, சரி, மற்றொன்றுக்குப் பதிலாக J. சரி. J. சரி, எண்பத்தைந்து, தொண்ணூறு, தொண்ணூற்றைந்து, நூறு, அது பதினைந்தாக இருக்கும். சரி, J, எண்பத்தைந்து, அது யாரிடம் உள்ளது? இங்கே இருக்கும் இந்த அம்மையாரிடம். அம்மா, நீங்கள் இங்கே வர முடியுமா? எண்பத்தைந்து, எண்பத்தாறு, எண்பத்தேழு, எண்பத்தேழு.

140 சகோதரர் ஜீன், மேடையிலிருந்து அவர்களை வழிநடத்த நீங்கள் இங்கே வருவீர்களா? எண்பத்தேழு, அது யாரிடமாவது இருந்ததா? எண்பத்தெட்டு. ஜெப அட்டை எண்பத்தெட்டு யாரிடம் உள்ளது? சரி. எண்பத்தொன்பது. J, எண்பத்தொன்பது, உங்கள் கையை உயர்த்துவீர்களா? நான்... விளக்குகள் இங்கே நேராக உள்ளன, என்னால் பார்க்க முடியவில்லை, எனவே நீங்கள் உங்கள் கையை உயர்த்தினால்... எண்பத்தொன்பது, அது

ஏற்கனவே அங்கே இருக்கிறதா? எண்பத்தொன்பது, தொண்ணூறு.

141 (ஓ, அது சரிதான், இன்றிரவு அது ஒரு பொருட்டல்ல.) தொண்ணூறு, எங்காவது உங்கள் கையை உயர்த்துவீர்களா? உங்களால் முடிந்தால் உங்கள் கையை உயர்த்தி, "ஆமென்" என்று சத்தமிடுங்கள். ஜெப அட்டை J, தொண்ணூறு. தொண்ணூறு. அது இங்கே இல்லையா?

142 அது... உங்களுக்குத் தெரியும், நான்-நீங்கள் வந்து, உங்கள் அட்டையைப் பெற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று விரும்புகிறேன்... பாருங்கள், அது என்னைக் குழப்புகிறது, பாருங்கள், சரியாக இங்கேதான் நான் குழப்பமடையக்கூடாது. புரிகிறதா? நீங்கள் ஒரு அட்டையைப் பெற்றால்... அதை எடுக்க வேண்டாம், அந்தப் பையன் உங்களுக்கு ஒன்றை வழங்கினால், நீங்கள் தங்கப் போவதில்லை என்றால் அதை எடுக்க வேண்டாம். (விளக்கை அணைத்த எவருக்கும் நன்றி.) தங்க வேண்டாம்... நீங்கள் தங்கப்போவதில்லை என்றால், சரி, அட்டையை

எடுக்க வேண்டாம். நீங்கள் அதை எடுத்தால், நீங்கள் வாருங்கள்.

143 சரி. J, தொண்ணூறு, தொண்ணூற்றொன்று, தொண்ணூற்றொன்று. யாரிடமாவது இருக்கிறதா...? [ஒலி நாடாவில் காலியிடம்]

144 ஓ, என்னவொரு தருணம்! இங்கே நிற்பது உங்களுக்கு எப்படிப்பட்ட உணர்வைத் தருகிறது என்று உங்களுக்குத் தெரியாது. அங்கே வெளியே குறைந்தபட்சம் ஐந்நூறு பேர் இருப்பார்கள் என்று நான் யூகிக்கிறேன். [ஒரு சகோதரர் சகோதரர் பிரன்ஹாம் இடம் பேசுகிறார்] (அதிகமா?) எப்படியிருந்தாலும், நான் ஐந்து லட்சம் பேருக்கு முன்பாக நின்றிருக்கிறேன், பாருங்கள், மேலும் பல்லாயிரக்கணக்கான புறஜாதிகளுக்கு முன்பாக கிறிஸ்துவை ஒரு சவாலாக எடுத்துச் சென்றிருக்கிறேன். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை, தேவன் அதை வாக்குத்தத்தம் செய்துள்ளார், அவர் எவ்வளவு உண்மையுள்ளவரோ அதேபோல அவருடைய வார்த்தைகளும் உண்மையுள்ளவை.

145 இப்போது, வேதத்தின் ஒரு அழகான காட்சி இன்றிரவு இங்கே இருக்கிறது. புறஜாதியினரான நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். அந்தப் பெண் அல்லது சமாரியர்கள், அந்தப் பெண் நகரத்திற்குள் வந்து கர்த்தராகிய இயேசு தனக்குச் செய்ததைச் சொன்னபோது இருந்ததைப் போல நீங்களும் பயபக்தியோடும் மரியாதை யோடும் இருக்கப்போகிறீர்களா? மேலும் அவள், "அதனால்..." என்று சொன்னாள். "அவர் மெசியாவல்லவா?" என்று அவள் அந்த மக்களிடம் கூடச் சொன்னாள். நிச்சயமாக.

146 பாருங்கள், வேதவாக்கியங்கள் ஆவிக்குரிய விதத்தில் அறிந்து கொள்ளப் படுகின்றன. அது எத்தனை பேருக்குத் தெரியும்? வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ள நீங்கள் அவற்றை அப்படியே நேரடியாக வாசிப் பதில்லை, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் அதை மறைத்திருப்பதாக தேவன் சொன்னார்.

147 பாருங்கள், அந்தத் தரிசனத்தைக் கூட, நானே அந்தத் தரிசனத்தை எழுதி, ஆயிரம் தடவைக்கும் மேலாக அதைப் படித்தேன், நான்

முதலில் இந்தியாவுக்குப் போக வேண்டும் என்பதை நான் பார்க்கவில்லை, நான் முதலில் ஆப்பிரிக்காவிற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அதற்கான நேரம் வரும்போது... இது என் சொந்தக் கையாலேயே எழுதப்பட்டிருக்கிறது. பாருங்கள், என்னால் அதைப் பார்க்க முடியவில்லை, நான் சென்று தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்வரை அது எனக்கு மறைக்கப்பட்டிருந்தது, அவருடைய வார்த்தைகள் நித்தியமானவை, அவை ஒருபோதும் தோற்றுப்போகாது என்பதைக் காண்பிப்பதற்காக அவர் என்னைத் திருத்தினார். புரிகிறதா? என்னால் அப்படி வாசிக்க முடியவில்லை.

148 "ஓ, வேதாகமம் இந்தக் காரியங்களைச் சொல்லவில்லை" என்று அநேகர் சொன்னார்கள்.

வேதாகமம் அதைச் சொல்கிறது. அது உண்மையாகிறது. மேலும் தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்துகிறார்.

149 இப்போது, நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் என்று நினைக்கிறேன், அம்மா.

நாங்கள் அப்படித்தான். இந்த அம்மையார் ஒரு கருப்பினப் பெண், நான் ஒரு வெள்ளையின மனிதன், அது இரண்டு வெவ்வேறு நிறங்களை உடைய மக்களை, இரண்டு தேசங்களை உருவாக்குகிறது. மேலும் அதுதான் பரிசுத்த யோவான் 4-ம் அதிகாரத்தில் இருந்தது போலவே இருக்கிறது, சமாரியனும் யூதனும், அவர்கள் இருவரும் வெவ்வேறு இன மக்களைச் சேர்ந்தவர்கள், ஆனால் தேவன் இனத்தைப் பார்ப்பவரல்ல, அவர் எல்லா இனங்களையும் உருவாக்கினார் என்பதை இயேசு அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

150 நாம் அனைவரும் ஒரே தகப்பன் மற்றும் தாயான ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்தே வருகிறோம், பூமியில் அதுவே முதன்மையானது, அங்கிருந்துதான் நாம் வருகிறோம். மேலும் நமது தேசங்களும் நாம் வாழ்ந்த இடங்களும், நமது நிறங்களை மாற்றியதும் தேவனுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாதவை, நாம் சந்ததியினராக இருக்கிறோம். அவரிடம் எல்லா வகையான மரங்களும் உள்ளன, அவரிடம் எல்லா வகையான மலர்களும் உள்ளன. நாம்

அனைவரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. அது உங்களுக்குத் தெரியுமா? இந்த இனப் பிரிவினைவாதிகள் போன்றவர்களிடம், அவர்கள் ஒரு நிமிடம் செவிகொடுத்தால், என்னால் பேச முடிந்தால் நன்றாக இருக்கும். ஆம், ஐயா.

151 தேவன் வெள்ளை மலர்களை உருவாக்கினார், நீல மலர்களை உருவாக்கினார், சிவப்பு மலர்களை உருவாக்கினார், அவை வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால் அவற்றை வித்தியாசமாகப் படைத்தார்; நாம் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால் நம்மை வித்தியாசமாகப் படைத்தார், ஆனால் நாம் அனைவரும் அவருடைய துதிகளுக்காகவே படைக்கப்பட்டோம், அது சரிதான்.

152 எனக்கு முன்பாக நிற்கும் இந்தப் பெண் ஒரு கிறிஸ்தவள், அவள் ஒரு நாத்திகராகவோ அல்லது விமர்சகராகவோ இருந்திருக்கலாம், ஆனால் அவளுடைய ஆவி... இப்போது, பரிசுத்த ஆவியானவர் வரும்போது, என்னை அவருடைய ஊழியக்காரனாக்குகிறார், மேலும்

நான் அவருடைய தூதனாக இருந்தால், நீங்கள் அதை உங்கள் முழு இருதயத்தோடும் நம்பினால், என் வார்த்தை அவருடையது, அவருடைய வார்த்தை என்னுடையது. அது சரிதான்.

153 நான் இந்த தேசத்தின் தூதனாக வேறொரு தேசத்திற்குச் சென்றால், நான் சொல்லும் எல்லாவற்றையும் இந்த தேசம் ஆதரிக்க வேண்டும். அது சரிதான். அதைப் பற்றி மற்ற தேசம் என்ன நினைக்கிறது என்பதைப் பொறுத்தது. பின்பு நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக வரும்போது, நான் அவருடைய வார்த்தைகளைப் பேசுகிறேன், அவர் அதை உறுதிப்படுத்துகிறார், மேலும் நான் உண்மையைச் சொல்கிறேன் என்பதை அவர் தமது ஆவியின் சான்றுகளால் காண்பிக்கிறார், பின்பு நீங்கள் அதை விசுவாசித்தால், நீங்கள் விரும்புவதைப் பெறுவதற்குத் தடையாக எதுவும் நிற்க முடியாது. "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்."

154 இப்போது, பார்வையாளர்கள் அறியும் வகையில், இங்கே நாங்கள் இருக்கிறோம்,

வாழ்க்கையில் முதன்முறையாகச் சந்திக்கிறோம், நாங்கள் ஒருவரையொருவர் அறியோம், நாங்கள் இங்கே நிற்கிறோம். அவளுக்கு ஒரு அட்டை வழங்கப்பட்டது, அது ஜீன் (Gene), லியோ (Leo) அல்லது பில்லி (Billy) அல்லது வேறு யாராலோ வழங்கப்பட்டது.

155 அவர்கள் அட்டைகளைக் கலந்து மக்களுக்கு வழங்குகிறார்கள், மேலும் அவர்கள்... அதை விரும்பும் எவரும் அதைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் இங்கே சிலவற்றையும், இங்கே சிலவற்றையும், அங்கே சிலவற்றையும் கொடுக்கிறார்கள், சாதாரணமாக... அப்படித்தான் செய்யச் சொல்லி நான் அவர்களிடம் சொல்கிறேன், அவர்கள் அவற்றைக் கொடுப்பதை நான் பார்த்ததில்லை, ஆனால் அவர்கள் அப்படித்தான் செய்ய வேண்டும்.

156 மேலும் என்னைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது, நான் அவளைப் பார்த்ததில்லை, எங்களுக்குத் தெரிந்தவரை இதுதான் எங்களின் முதல் சந்திப்பு என்பது இந்த அம்மையாருக்குத் தெரியும். [அந்தச்

சகோதரி சகோதரர் பிரன்ஹாம் இடம் பேசுகிறார்] நீங்கள் என்னுடைய கூட்டங்களில் ஒன்றில் இருந்தீர்கள், ஆனால் ஒருபோதும் மேடைக்கு வரவில்லை. சரி. அப்படியானால் நீங்கள் என்னைப் பார்த்திருக்கிறீர்கள், ஆனால் கூட்டத்தில் நான் உங்களைப் பார்த்திருக்கலாம், ஆனால் எனக்கு உங்களைத் தெரியாது, ஊஹுூம், ஆனால் கிறிஸ்துவுக்குத் தெரியும்.

157 இப்போது, நீங்கள் ஏதோ தேவைக்காக இங்கே இருந்தால்... நீங்கள், "நான்-நான் நோயுற்றிருக்கிறேன், எனக்கு... எனக்கு ஏதோ நோய் இருக்கிறது" என்று சொல்கிறீர்கள், அதற்கு நான், "ஏன், கர்த்தர் உங்களைக் குணமாக்கப் போகிறார்" என்று சொன்னால், நீங்கள் அதைச் சந்தேகிக்கலாம். புரிகிறதா? அங்கே என் வார்த்தைகள் சரியானவையா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியாது. ஆனால் எனக்கு ஒன்றும் தெரியாது என்று உங்களுக்குத் தெரிந்த ஒரு காரியத்தைக் குறித்து கர்த்தர் உங்களுக்குச் சொன்னால், அது ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையிலிருந்து வந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

158 சரி, நீங்கள், "சரி, அது... பிசாசுதான் அதை அவரிடம் சொன்னான்" என்று சொல்லலாம், பின்பு நீங்கள் பிசாசின் பலனைப் பெறுவீர்கள். "கர்த்தர் அதை அவரிடம் சொன்னார்" என்று நீங்கள் சொன்னால், பின்பு நீங்கள் கர்த்தருடைய பலனைப் பெறுவீர்கள். அது சரிதானா, பார்வையாளர்களே? இப்போது, அது-அது அவளால் செய்யப்பட்டது, உங்களுக்கும் அப்படியே இருக்கும். இந்தப் பெண்ணுக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு எந்த யோசனையும் இல்லை, எனக்கு எந்த யோசனையும் இல்லை, ஆனால் தேவனுக்குத் தெரியும்.

159 மேலும் அவள் அதை என்னிடம் சொல்ல வேண்டும் என்று நான் விரும்பவில்லை, ஏனென்றால் எனக்குத் தெரியாது, நான் இப்போது பிரசங்கித்த இந்தச் சிறிய பார்வையாளர்களுக்கு தேவன்தான் இதைச் செய்தார் என்பதைத் தெரியப்படுத்துவதற்கு, அது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியிலிருந்து வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன், பின்பு அதைப் பற்றி அவர்கள் என்ன

நினைக்கிறார்கள் என்பதைத் தீர்மானிப்பது அவர்களைப் பொறுத்ததாக இருக்கும்.

160 அவளிடம் எந்தக் குறையும் இல்லை, அவள் ஆரோக்கியமான பெண், ஆனால் அவளுடைய இருதயத்தில் ஒரு ஆனந்தமான விருப்பம் உள்ளது. நான் அவளுக்காக ஜெபித்து, அவள் பரிசுத்த ஆவியானவரைப் பெறும்படி அவள்மேல் கைகளை வைப்பேன் என்ற நம்பிக்கையில் இந்தப் பெண் என்னிடம் வந்திருக்கிறாள். அது முற்றிலும் சரி. அது உண்மை. நான் அவருடைய ஊழியக்காரன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அது தேவனிடமிருந்து வந்திருக்க வேண்டும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

161 நாம் இங்கே நின்று கொண்டிருக்கும் போதே, கர்த்தர் வேறு ஏதேனும் சொல்வாரா என்று பார்ப்போம்; அவர் சொல்வார் என்று நான் சொல்லவில்லை. ஆம், உங்கள் இருதயத்தில் மற்றொரு விருப்பம் உள்ளது, அது உங்களுக்கு அன்பான ஒருவருக்காக, உங்கள் கணவருக்காக, அவர் குடிப்பதைக் கைவிட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அது

**கர்த்தர் உரைக்கிறதாவது**. அந்த காரியங்கள் உண்மை, அம்மா. உங்கள் கையை உயர்த்தி...

162 இப்போது, சகோதரர் பிரான்ஹாமிடம் பேசிக்கொண்டிருக்கும் அந்த ஆவியானவரால் உங்கள் கன்னங்களில் அப்படி கண்ணீரை ஓடச் செய்ய முடியாது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, நீங்கள் இதற்கு முன்பு ஒருபோதும் அடைந்திராத ஒரு உணர்வைப் பெற்றுள்ளீர்கள். காண்கிறீர்களா? அது என்ன? அது உங்கள் மீது வரும் பரிசுத்த ஆவியானவர். காண்கிறீர்களா? அது கர்த்தருடைய தூதன், நீங்கள் அந்த பிரசன்னத்தில் இருக்கிறீர்கள், அது அவரே, உங்கள் இரட்சகரும் மீட்பருமாகிய அவரே. இப்போது நான் உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன்.

163 தேவனாகிய கர்த்தாவே, இங்குள்ள நமது சகோதரிக்கு, அவளுடைய இருதயத்தின் விருப்பத்தையும், அவள் கேட்டதையும் கொடுத்தருளும். சாலொமோனுக்கு நீர் அனுப்பியிருந்த ஒரு வரத்தைக் காண சேபாவிலிருந்து வந்த ராஜஸ்திரீயைப் போல, இவளும் இன்றிரவு அவ்வளவு மகிழ்ச்சியாகச்

செல்வாளாக. மேலும் அவள் தான் கேட்டதைப் பெற்றுக்கொண்டு, மகிழ்ச்சியோடு தன் வீட்டிற்குச் செல்வாளாக. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

164 தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

165 இப்போது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அனைவரும் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் திருப்தியடைகிறீர்களா? பாருங்கள், இது கர்த்தர், இது தேவன், இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, இதிலே நான் செய்வதற்கு ஒன்றுமே இல்லை.

166 இப்போது அங்குள்ள உங்கள் அனைவரையும் ஜெபிக்கச் சொல்கிறேன், வரிசையில் இருப்பவர்களே, வரிசையில் இல்லாதவர்களே, நீங்கள் ஜெபிக்கவும், விசுவாசிக்கவும், தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், உங்களில் சிலர் ஜெப அட்டைகள் இல்லாதவர்கள்.

167 அவர் இங்கே நிற்கிறார் என்பதை நான் அறிவதால் நான் என் நேரத்தை எடுத்துக்கொள்கிறேன். ஓ, நான் உங்களுக்கு விளக்க முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அதை முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை, என்னால் முடியாது. இப்போது, உங்களால் இதைக் காண முடிகிறதா? அங்கே செல்வதைப் பாருங்கள், அது இங்கேயே இருக்கிறது.

168 உங்களிடம் ஜெப அட்டை இல்லை. அம்மா, உங்களிடம் ஜெப அட்டை இருக்கிறதா? உங்களிடம் இல்லை. இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் இப்போது இங்கே கூட்டத்தில் இருக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்கள் விலாவிலும் உங்கள் காலிலும் உங்களுக்குப் பிரச்சனை இருக்கிறது. அது சரியாக இருந்தால், உங்கள் கையை உயர்த்துங்கள். இப்போது, இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்குகிறார். செல்லுங்கள், விசுவாசியுங்கள்.

169 நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா? இப்போது மிகவும் பயபக்தியுடன் இருங்கள், நான் அந்த அம்மாவிடம் பேச விரும்புகிறேன்.

170 நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள். நான்—என் வாழ்நாளில் உங்களை நான் பார்த்ததே இல்லை, ஆனால் கிறிஸ்து உங்களை அறிவார், இல்லையா? கிறிஸ்து உங்களை அறிவார் என்றால், நீங்கள் பிறந்தபோதே அவர் உங்களை அறிந்திருந்தார், அவர் அறிவார்... உங்கள் வாழ்நாளெல்லாம் அவர் உங்களுக்கு உணவளித்திருக்கிறார், மற்றும் நீங்கள்—நீங்களாக இருக்கும் அனைத்தையும், அவர் அறிவார். அவர் எனக்கு வெளிப்படுத்தினால்...

171 இங்கு வந்த முந்தைய பெண்மணி ஒரு கருப்பினப் பெண்மணி என்று நான் நம்புகிறேன், இவரும் ஒரு கருப்பினப் பெண்மணி. அம்மா, வரிசையில் நீங்கள் அடுத்தவரா? அங்கு ஒரு வெள்ளையினப் பெண்மணி இருக்கிறார், அது வெள்ளையின மற்றும் கருப்பின ஆகிய இரு இனங்களையும் உள்ளடக்கும்.

172 கர்த்தராகிய இயேசு உங்கள் பிரச்சனை என்னவென்று எனக்கு வெளிப்படுத்தினால், தெய்வீக பிரசன்னத்தில் இருக்கும் கருப்பின மக்கள் அனைவரும், முழு இருதயத்தோடு அதை விசுவாசிப்பார்களா? நீங்கள் விசுவாசிப்பீர்களானால், கருப்பின மக்கள் அனைவரும், உங்கள் கைகளை உயர்த்துங்கள். இவர் உங்களுக்கு அன்பானவர்.

173 ஒருநாள், பல வருடங்களுக்கு முன்பு, ஒரு மனிதர் கொல்கொதா மலைக்குச் சென்றுகொண்டிருந்தார், அவருடைய முதுகில் ஒரு சிலுவை இருந்தது, மேலும் அவருடைய தோள்களிலிருந்து தோல் முழுவதும் உரிக்கப்பட்டிருந்தது, அவருடைய வஸ்திரம் முழுவதும் ஒரு பெரிய, இரத்தக் கறையாக இருந்தது. மேலும் சிலுவையின் பாரத்தினால் அவருடைய சிறிய, பலவீனமான, மெலிந்த சரீரம் கீழே விழுந்தது, அப்போது உங்கள் தகப்பனாகிய சீமோன் வந்து சிலுவையை எடுத்து அதைச் சுமக்க அவருக்கு உதவினார்.

174 இப்போது, இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு இன்றிரவு அவருடைய

பிள்ளைகள் இங்கே நிற்கிறார்கள், சீமோன் சிலுவையைச் சுமக்க உதவிய அதே கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். நிச்சயமாக, அவர் உங்களை நேசிக்கிறார், மேலும் அவர் உங்களுக்கு உதவ இங்கே இருக்கிறார், அவர் செய்வதாக வாக்குத்தத்தம் செய்ததை நான் செய்வதற்கு அவர் என்னை அனுமதிப் பாரானால்.

175 நீங்கள் வேறொருவருக்காக இங்கே வந்திருக்கிறீர்கள், அது சரிதான். அது ஒரு மனிதர், உங்கள் மைத்துனர், அவர் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவர். அவருக்காக என்னை ஜெபிக்கக் கேட்பதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள். என்னால் அவரைக் குணமாக்க முடிந்தால், நான் அதைச் செய்திருப்பேன். ஆனால் இங்கே பிரசன்னமாயிருக்கிறவர் மீது நாம் இணைந்து வைக்கும் விசுவாசம், அதைச் செய்யும். என்னுடன் சேர்ந்து நீங்கள் விசுவாசிப்பீர்களா?

176 கர்த்தாவே, நீர் இந்த வேண்டுதலை அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். நமது விசுவாசம் இப்போது அசையாதிருப்பதாக,

ஆனால் தங்களாகவே விசுவாசத்தை ஏற்றுக்கொள்ள... போதுமான அறிவு இல்லாத அந்த நபரைக் குணமாக்க அது போதுமானதாக இருப்பாதாக. இந்த ஆசீர்வாதத்தை, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

177 சகோதரியே, நீங்கள் செல்லலாம், நீங்கள் எப்படி நினைத்தீர்களோ அப்படியே அது ஆவதாக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது ஒரு அற்புதமான, சிறிய புத்தகம், அதைப் படியுங்கள், அதில் ஜீவன் இருக்கிறது.

178 எனக்குத் தெரிந்தவரை, நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள். எனக்குத் தெரியாது, ஆனால் நாம் அந்நியர்கள் என்று நான் நினைக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை, நான் உங்களை பார்த்ததே இல்லை. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களா? நாம் அந்நியர்கள்தான். நீங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதை கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினால், நீங்கள் விசுவாசிப்பீர்களா? இப்போது, நீங்கள் ஒரு வெள்ளையினப் பெண்மணி.

179 அங்குள்ள வெள்ளையின மக்களைப் பற்றி என்ன சொல்வீர்கள், நீங்கள் விசுவாசிப்பீர்களா? கிணற்றருகே இருந்த அந்தப் பெண்ணைப் போலவே, இவரும் உங்கள் சகோதரிதான்.

180 இப்போது, பாருங்கள், குணமாக்க எனக்கு எந்த வல்லமையும் இல்லை, அது உங்களுக்குத் தெரியும். நான் வெறும் ஒரு மனிதன், அதாவது, உங்களுக்கு ஒரு கணவன் இருந்தால், அவர் எப்படியோ அப்படி, புரிகிறதா, அல்லது உங்கள் மகனைப் போல, அல்லது எவரைப் போலவும், நான் வெறும் ஒரு மனிதன், உங்கள்... வேறு எந்த மனிதனையும் போல, ஆனால் அது அவருடைய வரம். அதைச் செய்யக்கூடியது நான் அல்ல, அது அவரே. அதைச் செய்வதாக அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார், எனவே அவருடைய கிருபையினாலும் சித்தத்தினாலும் அதைச் செய்ய அவர் என்னை அனுமதிக்கிறார்.

181 நீங்களும் வேறொருவருக்காக இங்கே வந்திருக்கிறீர்கள், அது ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவர், உங்கள் சகோதரி. அதற்கான

தேவையை தேவன் சந்திப்பார் என்று உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிப்பீர்களா? உங்கள் கணவருக்காகவும், அது சரிதான், மூட்டுவலி, நீரிழிவு நோய், இருதயக் கோளாறு, உங்களுக்கும் இருக்கிறது. இப்போது விசுவாசியுங்கள், நீங்கள் உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல் இருந்தால், நீங்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்ளலாம்.

182 கர்த்தர் நமது சகோதரியை ஆசீர்வதித்து, இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவளுடைய இருதயத்தின் விருப்பத்தை அவளுக்குத் தருவாராக. ஆமென்.

183 வெள்ளையின மக்களே, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? பிறகு ஏன் நாம் காத்திருக்கவோ தாமதிக்கவோ வேண்டும்? உங்களுக்கு தேவை இருந்தால் நீங்கள் ஏன் இப்போதே குணமடையக் கூடாது? புரிகிறதா? புரிகிறதா? இப்போது, நீங்கள் அதை விசுவாசித்தால், உங்களிடமிருந்து அதை எடுத்துக் கொள்ளக்கூடியது எதுவுமில்லை, பாருங்கள், நீங்கள் அதை விசுவாசித்தால்.

184 இப்போது, தேவன் தமது அனுமதிக்கப்பட்ட சித்தத்தின் மூலமாக என்னை இதைச் செய்ய அனுமதிக்கிறார் என்றால், நிச்சயமாக நான் சத்தியத்தைப் பேசுகிறேன். தவறைப் போதிக்கிற ஒருவருக்கு தேவன் அப்படிப்பட்ட ஒன்றைக் கொடுப்பாரா? தேவன் அப்படிச் செய்யமாட்டார். அது அப்படி யிருக்காது, அது அப்படியிருக்காது, இதுவே சத்தியம்.

185 நான் சொல்வதை நினைவில் கொள்ளுங்கள்: ஒரு மனிதன் தேவனுடைய ராஜ்யத்தைக் காண்பதற்கு முன்பு அவன் மறுபடியும் பிறக்க வேண்டும். உங்களது சிறிய சபை வேறுபாடுகள் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை, நீங்கள் மறுபடியும் பிறந்திருந்தால், நீங்கள் தேவனுடைய குமாரனும் குமாரத்தியுமாய் இருக்கிறீர்கள். மேலும் நீங்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும். அது சரிதான். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராக இருக்கிறார். அதை மட்டும் நினைவில்கொள்ளுங்கள். அதை விசுவாசி யுங்கள், அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

186 “அவர் உங்கள் மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார், அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்.” பூமியில் உங்களை குணமாக்கக்கூடிய மனிதன் யாருமில்லை, எந்த மருத்துவரும் இல்லை, எந்த மருத்துவமனையும் இல்லை, எந்த மருந்தும் இல்லை. உங்களை குணமாக்கும் என்று எந்தவொரு மருத்துவரும் சொல்லக்கூடிய ஒரு மருந்துகூட நம்மிடம் இல்லை; அவர் அப்படிச் சொன்னால், அவர் என்ன பேசுகிறார் என்பது நிச்சயமாக அவருக்குத் தெரியாது.

187 குணமாக்குவது என்பது திசுக்களை மாற்றுவது அல்லது உருவாக்குவது ஆகும், எந்த மருந்தும் திசுக்களை உருவாக்காது. மருந்து கிருமிகளை எடுத்து, திசுக்களை அழிக்கும் கிருமிகளைக் கொல்லும், ஆனால் அது திசுக்களை உருவாக்காது, அதை தேவன் ஒருவரே செய்ய வேண்டும், அது ஒரு சிருஷ்டிப்பாகும். அவராலே மட்டுமே சிருஷ்டிக்க முடியும், சாத்தானால் சிருஷ்டிக்க முடியாது, சிருஷ்டிக்கப்பட்டதை அவனால் கெடுக்க முடியும், ஆனால் அவனால் சிருஷ்டிக்க

முடியாது, தேவன் ஒருவரே குணமாக்குபவராக இருக்கிறார்.

188 யாரையாவது குணமாக்கிய ஒரு சொட்டு மருந்தோ, மருத்துவமனையோ, அல்லது அறுவை சிகிச்சையோ ஒருபோதும் இருந்த தில்லை. வேதம் கூறுகிறது, “உன் நோய்களை யெல்லாம் குணமாக்குகிற கர்த்தர் நானே.” மருந்து சரிதான், எலிகளுக்கு விஷம் வைக்க எலி மருந்தை வைப்பதுபோல, கிருமிகளுக்கு விஷம் வைக்க அவர்கள் அதை எடுத்துக்கொள்கிறார்கள், ஆனால் எலிகள் ஓட்டையிட்ட வீட்டை அது சரிசெய்வதில்லை, புரிகிறதா. அது சரிதான். அது அந்த இடத்தை அடைப்பதில்லை, சிருஷ்டிப்பின் மூலமாக தேவன்தான் அதைச் செய்ய வேண்டும்.

189 அறுவை சிகிச்சை நல்லதுதான், அது ஒரு தடையை, பழுதான பல்லை, ஒரு வளர்ச்சியை, குடல்வாலை, மற்றும் பலவற்றை அகற்றுகிறது, அதெல்லாம் சரிதான், ஒரு கை முறியும்போது உடைந்த கையை அது சரிசெய்கிறது, அதெல்லாம் சரிதான், ஆனால் தேவனே குணமாக்குகிறார். பாருங்கள்?

தேவனால் மட்டுமே குணமாக்க முடியும். இது ஒன்றுமில்லை, எந்த இரகசியமும் இல்லை, இது வெறும் உண்மை.

190 நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் என்று நான் கருதுகிறேன். தேவனாகிய கர்த்தர் நம் அனைவரையும் அறிவார், இல்லையா? நீங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதை தேவனாகிய கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினால், நீங்கள் இப்போது விசுவாசிப்பீர்களா? இரண்டு கருப்பினப் பெண்மணிகள் இருந்தார்கள் என்று நான் நம்புகிறேன், இவர்கள் இரண்டு வெள்ளையினப் பெண்மணிகள். அது சரியா? நான் நினைக்கிறேன். சரி. இது அதைத் தீர்த்துவிடும், அதன்பிறகு மீதமுள்ள சபையாருக்காக நாம் ஜெபிப்போம்; இது போதுமானதாக இருக்க வேண்டும்.

191 நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என்பதை கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினால், அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். இந்தப் பெண்ணிடம் மிகவும் வினோதமான ஒன்று இருக்கிறது,

ஏனென்றால் ஒவ்வொரு முறை நான் அவளைப் பார்க்கும்போதும், வேறெங்கோ ஒரு தரிசனம் கடந்து செல்கிறது. அது சரிதான்.

192 இதிலே இன்னொரு பெண்ணும் சம்பந்தப்பட்டிருக்கிறாள், அது உங்கள் சகோதரி என்று நான் நம்புகிறேன், அவள் இங்கே இல்லை. அவள் தண்ணீருக்கு மறுகரையில் வேறு ஏதோ ஒரு இடத்தில் இருக்கிறாள், அது மிச்சிகன் ஏரிக்கு மறுகரையில் இல்லை, ஏனென்றால் அது ஒரு பெரிய நீர்ப்பரப்பு, அது ஸ்வீடன். இரவில் அவளால் தூங்க முடியாதபடி அவளுக்கு ஏதோ பிரச்சனை இருக்கிறது. அவள் இருமுகிறாள், அது ஆஸ்துமா. அது சரிதான். **கர்த்தர் உரைக்கிறதாவது**.

193 உங்களுக்கே உயர் இரத்த அழுத்தம், மற்றும் இருதயக் கோளாறு இருக்கிறது. அதுவே கர்த்தர் உரைக்கிறார் என்பதாகும்.

194 நான் என்ன சொன்னேன் என்று எனக்குத் தெரியவில்லை, அது இப்போது எனக்கு ஒரு இரகசியமாக இருக்கிறது, நான் அதை கனவு கண்டது போல் இருக்கிறது,

ஆனால் அது சத்தியமாக இருந்தது. அது என்னுடைய சத்தம்தான், ஆனால் பேசியது நான் அல்ல, வேறெதுவோ என்னுடைய சத்தத்தைப் பயன்படுத்தியது. இப்போது, அது கர்த்தராகிய இயேசுதான் என்று உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

195 சபையாரும் அதேபோல் விசுவாசிக் கிறார்களா? அப்படியானால் நீங்கள் விரும்புவதைக் கேளுங்கள், அது உங்களுக்குச் செய்யப்படும். பாருங்கள்? "இந்த மலையை பெயர்ந்துபோகச் சொல்லி உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல், நீங்கள் சொல்வது நடக்கும் என்று விசுவாசியுங்கள், நீங்கள் சொல்வதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்." அதை மட்டும் விசுவாசியுங்கள்.

196 சரி. நாம் ஜெபிப்போம், சகோதரி.

197 எங்கள் பிதாவாகிய தேவனே, இந்தப் பெண்ணின் மீது இரக்கமாயிரும், அவளுடைய இருதயத்தின் விருப்பத்தை அவளுக்குத் தந்தருளும். உமது அன்பான குமாரனாகிய

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், அவளுக்காக இந்த ஆசீர்வாதத்தைக் கேட்கிறேன். ஆமென்.

198 சந்தேகப்பட வேண்டாம், நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

199 இப்போது, யாராவது... "இந்த மனிதர் மக்களின் மனதை வாசிக்கிறார்" என்று யாராவது சொல்லக்கூடும் என்பதற்காகவே.

200 இங்கே வாருங்கள், அம்மா. மனம் வாசிப்பது என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மனதில் ஒரு எண்ணை நினைத்துக்கொண்டு அதை சிறிது நேரம் யூகிப்பதாகும். இப்போது, அம்மா, உங்கள் கையை என் கையின் மேல் வையுங்கள். நான் இந்தத் திசையைப் பார்த்தபடி, உங்களுக்கு என் முதுகைக் காட்டியபடி இருக்கும்போது, உங்கள் பிரச்சனை என்னவென்று இயேசு எனக்கு வெளிப்படுத்தினால், நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பீர்களா? அவர் அதை அருள வேண்டும் என்பதே என் ஜெபம்.

201 எனக்கு உங்களைத் தெரியாது என்பது தேவனுக்குத் தெரியும், ஆனால் அவர் அறிவார்.

ஆனால் நீங்கள் அவரை முழு இருதயத்தோடு விசுவாசித்தால், உங்கள் வயிறு இனி உங்களைத் தொந்தரவு செய்யாது. அது முடிந்துவிட்டது என்று விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் சென்று குணமடையலாம்.

202 தேவனால் இருதயக் கோளாறைக் குணமாக்க முடியும், அது அவருக்கு ஒரு பல்வலியைப் போல மிகச் சிறிய காரியமே. அவர் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தபடியே, உங்களுக்கு ஆகக்கடவது. என் சகோதரனே, நீங்கள் செல்லும்போது தேவன் உங்களோடிருப்பாராக.

203 சற்றுமுன்பு நான் வயிற்றுப் பிரச்சனை என்று சொன்னபோது, அது உங்கள் பிரச்சனையும்கூட. அதுமட்டுமல்ல, இந்த மனிதருக்கு இருக்கும் அதே பிரச்சனை உங்களுக்கும் இருந்தது, இருதயக் கோளாறு. அது சரிதான். இப்போது, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தபடியே, உங்களுக்கு ஆகக்கடவது. செல்லுங்கள், தேவன் உங்களோடிருந்து உங்களைக் குணமாக்குவாராக.

இப்போது விசுவாசம் வையுங்கள், மற்றும் நம்புங்கள்.

204 சபையாரில் எத்தனை பேர் விசுவாசிக்கிறார்கள்? இப்போது பாருங்கள், காண்கிறீர்களா, உங்களிடம் இல்லை... இங்கே பாருங்கள், இந்த—இந்தப் பெண்மணி:

205 அம்மா, நான் உங்களிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாவிட்டாலும் நீங்கள் விசுவாசிப்பீர்களா, கிறிஸ்து உங்களைக் குணமாக்குவார் என்று நீங்கள் இன்னும் விசுவாசிப்பீர்களா? செல்லுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான் சொல்வதை ஏற்றுக்கொண்டு, அவர் உங்களைக் குணமாக்குகிறார் என்று விசுவாசியுங்கள். ஆமென். சரி.

206 காண்கிறீர்களா? அவ்வளவுதான். சொல்லப்பட வேண்டிய அவசியமில்லை...

207 அம்மா, உங்களுக்கு என்ன குறைபாடு என்று நான் சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள், நீங்கள் என்னை விசுவாசிப்பீர்களா? நான் உங்களிடம் சொல்லாவிட்டாலும்,

எப்படியும் என்னை விசுவாசிப்பீர்களா? உங்களுக்குத் தெரியவில்லை. சரி, அப்படியானால் உங்கள் பிரச்சனை என்னவென்று நான் சொல்கிறேன், உங்களுக்கு மூட்டுவலி இருக்கிறது. அது சரிதான். சென்று விசுவாசியுங்கள், நீங்கள் குணமாவீர்கள். ஆமென். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

208 சரி, அம்மா. நான் உங்களிடம் சொன்னால், உங்களை அதிகமாக விசுவாசிக்கச் செய்தால் நீங்கள் விசுவாசிப்பீர்களா? அப்போது உங்கள் முதுகு குணமாகும். செல்லுங்கள், முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள்.

209 வாருங்கள். நீங்களும், அதே காரியம்தான், நீங்கள் குணமடைவீர்கள் என்று விசுவாசிப்பீர்களா? அப்படியானால் கர்த்தர் அதை உங்களுக்கு அருளுவாராக, சகோதரி, அதன்பிறகு எல்லாம் முடிந்துவிடும். ஆமென்.

210 "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? பாருங்கள் இது—இது ஒரு டெலிபதி அல்ல.

211 இயேசு கிறிஸ்து உங்களுடைய அந்த இருதயத்தைக் குணமாக்கி உங்களைச் சுகமாக்குவார் என்றும், உங்கள் இருதயக் கோளாறு எல்லாம் நீங்கிவிடும் என்றும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அது ஒரு நரம்பு சம்பந்தமான இருதயக் கோளாறு. சரி. இப்போது விசுவாசித்தபடியே செல்லுங்கள், குணமடையுங்கள். தேவன் மேல் விசுவாசம் வையுங்கள், தேவன் அதை அருளுவார்.

212 சரி. நீங்கள் வருகிறீர்களா, அம்மா? அந்த அம்மாவின் பிரச்சனை, பெண்கள் சம்பந்தமான பிரச்சனை, மற்றும் இருதயக் கோளாறு, நரம்புத் தளர்ச்சி. சரி. தேவன் உங்களை முழுமையாக குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா...? அப்படியானால் செல்லுங்கள், இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்குவார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

213 விசுவாசம் வையுங்கள், நம்புங்கள். உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக் கிறீர்களா? விசுவாசியுங்கள். அவ்வளவுதான்

இருக்கிறது. "உன்னால் விசுவாசிக்கக் கூடுமானால்!" என்று வேதம் கூறுகிறது.

214 சற்று நேரத்திற்கு முன்பு நான் மூட்டுவலி என்று சொன்னபோது, இங்கே உட்கார்ந்திருக்கும், தலையில் ஒரு சிறிய ஸ்கார்ஃப் அணிந்திருக்கும் அம்மா, தேவன் உங்கள் மூட்டுவலியுடன் அதே நேரத்தில் உங்களையும் குணமாக்கினார் என்று விசுவாசிக்கிறீர்களா? நல்லது, நீங்கள்—நீங்கள் அதை உணர்ந்தீர்கள், இல்லையா? நல்லது, அந்த நேரத்திலேயே அதை அடைந்தீர்கள், அப்போதுதான் நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்கள். அது அற்புதமானது அல்லவா?

215 அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், ஜெபிக்கப்போவதைப் போல தன் கைகளை மடித்துக்கொண்டிருந்த அந்த வயதான அம்மா? அந்த பித்தப்பை நிலையிலிருந்து தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? அவர் குணமாக்குவார் என்று விசுவாசிக் கிறீர்களா? அப்படியானால் உங்கள் கையை அவரை நோக்கி உயர்த்துங்கள். சரி. இப்போது

நீங்கள் குணமடையலாம். ஆமென். நீங்கள் அதை விசுவாசித்தால் தேவன் மேல் விசுவாசம் வையுங்கள்.

216 இங்கே உட்கார்ந்திருக்கும் அம்மா, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அந்தத் தலை பிரச்சனை உங்களை விட்டு நீங்கும் என்றும், அங்கே உட்கார்ந்திருக்கும்போதே தேவன் உங்களைக் குணமாக்குவார் என்றும் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசுவாசித்தால், நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளலாம். நிச்சயமாக. ஆமென். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

217 இங்கே உட்கார்ந்துகொண்டு, ஜெபித்துக்கொண்டு, கால்களில் பிரச்சனை உள்ள நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? சரி, நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆமென். விசுவாசி யுங்கள், அவ்வளவுதான். தேவன் மேல் விசுவாசம் மட்டும் வையுங்கள். நிச்சயமாக.

218 அங்கே பின்னால் அமர்ந்திருக்கும் சிறுவனே, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, அந்தத் தோல் பிரச்சனை உள்ள ஐயா, தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? சரி. நீங்கள் கேட்பதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆமென்.

219 அங்கே உங்களுக்கு அருகில் அமர்ந்திருக்கும் அம்மா, கல்லீரல் பிரச்ச னையால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள், உங்களைத் திரும்பச் செய்து... சரி, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் கேட்பதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம், சென்று விசுவாசியுங்கள். நிச்சயமாக.

220 பாருங்கள், பரிசுத்த ஆவியானவர் இங்கே இருக்கிறார், நான் என்னுடைய பலத்தை சேமித்து வைக்க முயற்சிக்கிறேன்.

221 சரி. ஜெபிக்கப்பட வேண்டிய அடுத்த நபர் நீங்கள்தானா அம்மா? உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிக்கிறீர்களா? சரி. உங்களுக்கு இருக்கும்

அந்த வயிற்றுப் பிரச்சனையை தேவன் குணமாக்குவார் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கு குடல் பிரச்சனை இருக்கிறது. அது சரிதான். நீங்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர் அல்ல, நீங்கள் விஸ்கான்சின் மாநிலத்திலுள்ள மில்வாக்கியைச் சேர்ந்தவர். உங்களுக்கு உள் உறுப்புப் பிரச்சனைகள், குடல் பிரச்சனைகள் உள்ளன, மேலும் நீங்கள் பலமுறை மருத்துவமனையில் இருந்திருக்கிறீர்கள், அறுவை சிகிச்சைகளுக்காக குறைந்தது பதினைந்து அல்லது பதினாறு முறை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக் கிறீர்கள், மேலும் நீங்கள் மீண்டும் செல்ல வேண்டும் என்று மருத்துவர் கூறுகிறார். அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாகும். நான் தேவனுடைய தீர்க்கதரிசி, அவருடைய ஊழியக்காரன் என்று நீங்கள் விசுவாசிக்கி றீர்களா?

222 அப்படியானால் செல்லுங்கள், மருத்துவர்களிடமிருந்து மறைந்திருக்கும் இந்தப் பிசாசை கர்த்தராகிய இயேசு கடிந்து கொள்வாராக, ஆனால் உன்னால் தேவனி டமிருந்து மறைந்திருக்க முடியாது. இந்தப்

பெண்ணை விட்டு விலகு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளை விட்டு வெளியே வா!

223 நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். விசுவாசியுங்கள், நீங்கள் கேட்டதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம், அதன்பிறகு அது முடிந்து விடும். ஆமென். இப்போது சமாதானத்தோடே செல்லுங்கள்.

224 உங்கள் ஒவ்வொருவரும், விசுவாசிக்கிறீர்களா?

225 ஓ கர்த்தாவே, உமது ஆவியாகிய, பரிசுத்த ஆவியானவரை அனுப்பி, இப்போது உமது பிரசன்னத்தினால் இந்த மக்களை நிரப்புவீராக, அவர்கள் சேபா தேசத்து ராஜஸ்திரீயைப் போல இருப்பார்களாக, அவர்கள் தங்கள் இருதயத்தில் தேவனுடைய பொக்கிஷங்களுடன் எழுந்து நின்று குணமடை வார்களாக, அவர்களில் ஒவ்வொருவரும் இன்றிரவு பூரணமாகக் குணமாக்கப்பட்டு தங்கள் வீட்டிற்குச் செல்வார்களாக. இயேசுவின் நாமத்தில், நான் இதைக் கேட்கிறேன். ஆமென்.

226 நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்களா? அப்படியானால் உங்கள் கால்களில் எழுந்து நின்று, இயேசுவின் நாமத்தில் அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

227 சகோதரர் போஸ் சபையாரை அனுப்பிவைப்பாராக.